# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 115 இதழ் : 38 13-10-1989 (ஒக். 13 — ஒக். 20) ரூபா 1-50 — இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


கிறிஸ்துவுக்கு இவரைப் போன்ற மறைத்தூதர்கள் தேவை. உமது பதில்? மறைபரப்பு ஞாயிறு 1989 (ஆலய விளம்பரப் பலகையைப் பார்க்கவும்.)


Library 1989-10-20


இன்றைய நிலையில் நற்செய்தி அறிவிக்கும் கடமை! கிறீஸ்துவின் சீடராகிய நாம் தனிப்பட அழைக்கப்பட்டுள்ளோம்.

# அனைத்து அழைத்தல்களையும் ஊக்குவிக்க!

# திருத்தந்தையின் மறைபரப்புத் தினசெய்தி!!

**அனைத்துலக அன்பின் தினமான இன்று திருத்தந்தை உலகின் ஏழை எளியவர்கள் சார்பாகவும் தமது மறைச் சகோதரருக்கும், நல்லெண்ணமுடைய சகல மக்களுக்கும் நேசக்கரம்— நீட்டும் மறைபோதகர் சார்பாகவும், பேசுகிறவராக இருக்கிறார். திருச்சபையின் மறைபோதகப் பணியில் பங்குபற்றும் அனைவருக்கும், இறைவனின் தயவிற்கு ஓர் அறிகுறியாகவும், எனது அன்புக்கும், நன்றிக்கும் ஓர் அடையாளமாகவும் எனது அப்போஸ்தல ஆசியை வழங்குகிறேன்.**

தனது ஆட்சியின் 11 ஆவது ஆண்டில் வத்திக்கானில் இருந்து 1989 மே 14 ஆம் திகதி பெந்தெகோஸ்தே திருநாளன்று திருத்தந்தை விடுத்த செய்தியில் அனைத்துலக மறைபோதகப்பணி முழுத்திருச்சபையினதும், முன் நிலையில் வைக்கும் முக்கியமான அறைகூவல் என்னவெனில் அழைத்தல்கள் கிடைக்கக்கூடிய இடங்களிலெல்லாம் அதாவது குருத்துவநிலை, துறவுநிலை அல்லது பொதுநிலையில் அழைத்தல்களைப் பேணுவதாகும். உலகில் திருச்சபை பரவ ஆரம்பித்த காலத்தில் அப்போஸ்தலர்கள் செய்ததே இன்று மறைபரப்பாளரின் நற்செய்திமூலம் தொடர்ந்து நடைபெறுகிறது.

சுதேச குருத்துவம் தழைத்தோங்குவது மறைபோதகரது உழைப்பின் பயனாகும். அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையை இச்செய்தியில் நினைவுகூர்ந்து பரிந்துரைக்க விரும்புகிறேன். இது எனது கடப்பாடு மட்டுமல்ல. எனது சொந்த ஆவலுமாகும். தமது செபங்களினாலும் காணிக்கைகளினாலும் இச்சபையின் பணிகளில் பங்குபற்றும் அனைவருக்கும், இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

## ஸ்பானியாவில் திருத்தந்தையின் உரை

ஆகஸ்ட் 19-ம் திகதி திருத்தந்தை தமது ஸ்பானிய பயணத்தை ஆரம்பித்தார். புனித யாகப்பரின் கல்லறை இருக்கும் சந்தியாகோ டி கம்பஸ் தெலாவுக்கு அருகிலுள்ள விமான நிலையத்தில் அவர் வந்திறங்கியபோது 1-ம் யுவான் கார்லோஸ் அரசரும், அரசி சொபியாவும், பிறஅரச, திருச்சபைப் பெரியார்களும் அவரை வரவேற்றனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறியபின், திருத்தந்தை ஆற்றிய உரையில் இளைஞர்களை சிறப்பாக விளித்துப் பேசினார்.

" ஸ்பானியாவுக்கு நான் மேற்கொள்ளும் மூன்றாவது மறைப் பயணத்தின்போது சந்தியாகோ டி கம்பஸ்தெலாவுக்கு வந்து உலகத்தின் பல இடங்களிலிருந்து வந்துள்ள கத்தோலிக்க இளைஞர்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சிகொள்கிறேன். இவர்கள் ஆசாரத்துக்குரிய இந்த அப்போஸ்தலரின் கல்லறையினருகில் சகோதரத்துவத்துடன் உறவாடி ஆழ்ந்த ஆன்மநலம் பயக்கும் சில நாட்களைக் கழிக்க இங்கு வந்துள்ளனர். எவ்வளவோ கஷ்டப்பட்டு தவ மனப்பான்மையுடன் இறைவனுடனும், மனிதருடனும் தமது நட்பை உறுதிப்படுத்த இங்கு கூடியுள்ளனர்.

பேறுபெற்ற இந்நகரானது உறுதியாக வேர்பாய்ச்சி நின்று ஒருமைப்பாட்டை வளர்த்துள்ளது. அருளையும் மன்னிப்பையும் நாடி இங்கு வந்துள்ள பெருந்தொகையான இளைஞர்களைப் பார்க்கும்போது இது கடந்தகாலத்துக்கு நாம் அளிக்கும் வணக்கம் மட்டுமல்லாது, நிகழ்காலத்திலும் வருங்காலத்திலும் உள்ள நம்பிக்கையையும் காட்டுவதாகத் தோன்றுகின்றது.

இன்று திருச்சபை ஒரு புதிய கிறிஸ்தவ மயமாக்கலுக்கு ஆயத்தம் செய்கிறது. இது திருச்சபை ஏற்கவேண்டிய ஒரு சவாலாகும்.

இன்று நான் இராயப்பரின் வாரிசாக, எனது சகோதரருக்கு ஊக்கமளிக்கும் பொருட்டும், இளைஞருக்கு வலுவூட்டி நானும் அதனால் வலிமை பெறும் பொருட்டும், யேசுக்கிறிஸ்துவே வாழ்வும், வழியும் உண்மையுமானவர் என்பதை எடுத்துரைக்கும் படியும் இங்கு வந்துள்ளேன்.

மனித மகத்துவம் சிறந்து விளங்குகின்ற, உண்மையும் நீதியும் பேணப்படுகின்ற ஓர் உலகைக் கட்டியெழுப்புவதில் எல்லோரையும் ஈடுபடுத்த வந்துள்ளேன்.

கிறிஸ்துவின் நற்செய்திக்குத் தமது இதயத்தைத் திறந்து, அதற்குச் சாட்சிகளாக வாழும்படி இளைஞரை அழைக்கின்றேன்."

## வித்தியா ஜோதியின் 100வது ஆண்டு நிறைவு

யேசுசபைக் குருமடமாகிய வித்தியாஜோதி நூறு ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ளது. ஆரம்பத்தில் புனித மரியாள் கல்லூரியென அழைக்கப்பட்ட இந்நிறுவனம் மேற்கு வங்காளத்திலுள்ள குர்செயோங் என்னுமிடத்தில் அமைந்திருந்தது. அங்கு அது 83 ஆண்டுகளாகக் குருமாரைப் பயிற்றி வந்துள்ளது. 1972இல் அது புதுடில்லிக்கு மாற்றப்பட்டது. இறையியல் கற்பதற்கு மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார மாற்றங்களை உணரவேண்டியது அவசியமாதலாலும், பரந்த மனப்பான்மையும், பல்வேறு கலாசாரங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய திறந்த உள்ளமும், நவீன இந்தியாவை அறிந்து அதை நேசிக்கும் பண்பும், குருத்துவ பயிற்சியிற் தேவைப்படுவதாலும் இந்த மாற்றம் செய்யப்பட்டதென முன்னாள் யேசுசபை முதல்வர் பிதா பேதுரோ அருப்பே குறிப்பிட்டுள்ளார்.

இந்நிறுவனம் 2000த்துக்கு மேற்பட்ட குருமாரைப் பயிற்றியுள்ளது. தற்போது ஓர் இறையியல் கல்லூரியாக விளங்கிவரும் வித்தியாஜோதியில் இருபாலாருமாக 257பேர் பயின்று வருகின்றனர்.

இவர்கள் பாரம்பரிய புத்தக அறிவுபெறுவது மட்டுமல்லாமல், இன்றைய இந்திய மக்களின் பிரச்சினைகளில் ஊறி அவற்றில் ஈடுபாடு கொள்கின்றனர்.

திருமதி இந்திராகாந்தியின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட இனக் கலவரங்களின் போது அமைதியை ஏற்படுத்த முயன்றனர். கோபால் நச்சு வாயு விபத்தில் பாதிக்கப்பட்டோருக்காகக் குரலெழுப்பினர். இவ்வாறு மக்கள் பிரச்சினைகளிலும் அனுபவங்களிலும் இணைந்து ஏழை எளியவர்களினூடாக நற்செய்திக்கு விளக்கம்காண முனைகின்றனர்.

பிற மதத்தவருடன் உரையாடலும் மேற்கொள்ளப்படுகின்றது. பிறமதப் பெரியார்களை அழைத்து பல்வேறு விடயங்கள் குறித்து அவர்களுடன் ஆராயப்படுகின்றது.

வித்தியாஜோதியின் நூற்றாண்டுவிழா வைபவங்கள் அக்டோபர் 1ஆம் திகதியன்று ஆரம்பமாகி ஒருவருடம்வரை நீடிக்கும்.

**மறை அறிவிப்பு ஞாயிறு**

**22-10-1989**

ஞாயிறு திருப்பலிக் காணிக்கை மறைபரப்புப் பணிக்காக பயன்படுத்தப்படும்.

## கோடைகால மறைக்கல்வி வகுப்புகள்

ஷாங்காய் மறைமாவட்டத்தில் நடைபெற்ற ஒருமாத கோடைகால மறைக்கல்வி வகுப்புகளில் ஏறத்தாழ 2000 புதிய கத்தோலிக்கர் பங்குபற்றினர். ஜூலை–ஆகஸ்ட் மாதங்களில் ஷாங்காயில் புதிதாகத் திறக்கப்பட்ட 36 பங்குகளில் இவ்வகுப்புகள் நடைபெற்றன. பங்குபற்றியோருள் பெரும்பாலானோர் பாடசாலைச் சிறுவர்கள். ஆனால் பல்கலைக்கழக மாணவர், தொழில் புரிவோர் சிலரும் அவர்களுள் இருந்தனர்.

வழக்கமான மறைக்கல்வி வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தப்பட்ட இப்பயிற்சியின் பின் சுமார் 1800 பேர் திருமுழுக்குப் பெற்றனர். பாப்பரசரின் அதிகாரம் பற்றிய திருச்சபையின் நிலையும், சீன வத்திக்கான் அரசியல் நிலையும் விளக்கப்பட்டன.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

### மறைபரப்பு பணி

2ம் வத்திக்கான் சங்கம் 'திருச்சபை மறைபரப்பும் பணியை தன் உள்ளார்ந்த இயல்பிலேயே கொண்டுள்ளது' என்கிறது.

'திருச்சபையின் தூதுரைக்கும் பணி இன்றியமையாத பணி' என்று 6-ம் சின்னப்ப பாப்பரசர் கூறியுள்ளார்.

ஆரம்ப காலம் முதல் திருச்சபை மறைபரப்பும் பணியை தன் இன்றியமையாத பணியாகக் கொண்டுளளது.

அதன் பயனாகத்தான் இன்று நாம் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பெற்றுள்ளோம்.

உலகில் திருச்சபை பரவ ஆரம்பித்த காலத்தில் அப்போஸ்தலர்கள் செய்ததே இன்று மறைபரப்பாளரின் நற்செய்திப்பணி மூலம் தொடர்ந்து நடைபெறுகிறது.

எமது மக்களுக்கு மட்டுமல்ல, எல்லா மக்களுக்கும் மீட்பின் செய்தியை கேட்காத இறுதி ஆள் இருக்கும் வரை இப்பணி தொடரவேண்டும்,

தூய ஆவியின் செயல் இன்றி நற்செய்தி அறிவிப்பு பணி ஒரு போதும் நடைபெற முடியாது. திருச்சபையின் ஆரம்பகாலம் முதல் இன்று வரை திருச்சபை பரிசுத்த ஆவியின் செயற்பாடுகளால் வளர்ந்துள்ளது என்பதற்கு நற்செய்தி ஏடுகள் சான்று பகர்கின்றன.

'இவரே என் அன்பார்ந்த மகன் ........' என்று இயேசு யோர்தான் நதியில் தமது அழைப்பை பெற்றது முதல் படிப்படியாக தூய ஆவியின் செயற்பாட்டை நாம் காணலாம். இயேசு சோதிக்கப் படுவதற்காக பரிசுத்த ஆவியால் பாலை வனத்திற்கு இட்டுச் செல்லப்பட்டார். ஆண்டவருடைய ஆவி என் மேலே என்று தம் பகிரங்க வாழ்வை ஆரம்பித்தார். 'பிதா, சுதன் பரிசுத்த ஆவியின் பெயரால் உலகெங்கும் போய் போதியுங்கள்' என்று அப்போஸ்தலர்களுக்கு மறை பரப்பும் செய்தியைக் கொடுத்தார். பெந்தகோஸ்தே எனும் தூய ஆவியின் விழாத்தான் ஆரம்பகால திருச்சபையின் பிறப்பு விழாவாக உள்ளது. தூய ஆவியைப் பெற்ற பின தான் சீடர்கள் போதித்தார்கள், போதனைக்கு ஏற்ப வாழ்ந்தார்கள், இயேசுவிற்குத் துணிவோடு சாட்சியம் பகர்ந்தார்கள்.

இராயப்பரும், அருளப்பரும் இனி இயேசுவின் பெயரைச்சொல்லி பேசவோ, போதிக்கவோ கூடாது எனக் கட்டளை இடப்பட்டபோது ''நாங்கள் பார்த்ததையும் கேட்டதையும் பேசாமல் இருக்க எங்களால் முடியாது'' (அப்.பணி 4;20) என்று ஆணித்தரமாக பதில் கொடுத்தார்கள்.

'மீண்டும் வரும் இத்தினத்தில் திருநிலையினர், விசுவாசிகள் அடங்கிய இறைமக்கள் அனைவர்க்கும் மறைபரப்பின் ஆவியாகிய தூய ஆவி மீண்டும் அளிக்கப்படுவாராக' என திருத்தந்தை தமது இவ்வாண்டிற்கான மறைபரப்புச் செய்தியில் அனைத்து மக்களுக்கும் தூய ஆவியை வேண்டி நிற்கிறார்.

மறைபரப்பு தினமாவது மறைபரப்புதலோடு சம்பந்தப்பட்ட அனைத்தையும் ஊக்குவிக்கும் உற்சாகப்படுத்தும் தினமாகும்.

இறைவார்த்தையை அறிவித்தல், அதை மற்றவர்களோடு பகிர்ந்து வாழ்தல், திருவருட்சாதனங்களில் பங்குபற்றுதல், பக்தி முயற்சிகளைச் செய்தல், மறைக்கல்வி வகுப்புகளைக் கவனித்தல், கத்தோலிக்க பத்திரிகைகள் புத்தகங்களை வாங்கிப்படித்தல், மறையோடு சம்பந்தப்பட்ட விழாக்களை நடத்தல்—இவை எல்லாம் மறைபரப்புதலோடு சம்பந்தப்பட்டவை தான்.

'இவை ஆழமாக்கப்பட்டால்தான் நாம் உலகை கிறிஸ்து மயமாக்கும் பணியில் போதனையாலும், வாழ்வாலும் சான்று பகர முடியும்.

'இன்றுமனிதன் போதிப்பவர்க்கு செவிமடுப்பதை விட சான்று பகர்வோர்க்கே அதிக விருப்பத்தோடு செவிமடுக்கிறான்' என்றார் திருத்தந்தை 6ம் சின்னப்பர்.

தூய ஆவி நற்செய்திப் பணி செய்ய எம்மை தூண்டுவாராக!

## தேனருவி

### ஆண்டின் 28-ம் ஞாயிறு (15-10-89)

### நீ சொல்லும் நன்றி என்ன ?

வயது முதிர்ந்த தாய் ஒருத்தி தன் தள்ளாடும் வயதில் வயோதிபர் மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதுவும் இனம் தெரியாத யாரோ ஒரு நல்லவர் புண்ணியத்தாலே தான். உணவு, உடை, நல்ல பராமரிப்பு, ஜெபவாழ்வு அனைத்தும் குறைவு படாமல் வழங்கப்பட்டாலும், ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு என்று தான் வளர்த்த அன்பு மகனைப் பார்க்க வேண்டும் என்பது தான் அவளுடைய தணியாத ஏக்கம். ஆனல், அந்த மகன் வெளிநாட்டில் மிகவும் சொகுசாக வாழ்கின்றான். தனது தாய் உயிரோடு இருக்கின்றாரோ, என்றுகூட அக்கறை இல்லாமல், தான் எங்கு இருக்கின்றான் என்று கூட அவருக்கு அறியப்படுத்தாமல் இருக்கின்றான்.

இப்பிள்ளை மனம் கல்லானதுபோல எத்தனையோ கல்லான உள்ளங்கள் மனித உறவுகளில் இன்று அதிகரிக்கின்றன. தம் வாழ்வை வளம்படுத்திய பெற்றோர், உறவினர், நண்பர், அன்பர், ஆசிரியர், நன்கொடையாளர் என நல்லவர்களை மறந்தும், மறுதலித்தும் அவர்கள் மனங்களைப் புண்படுத்தி விடுகின்றனர் பலர்.

நன்றி மறப்பது ஒரு தவறு அதிலும், எதிர்பார்க்கப்பட்டவர் அதை மறப்பது பெரும் வேதனையை உண்டு பண்ணுகின்றது. இன்றைய இறை வார்த்தையில் எதிர்பார்க்கப் பட்டவர் நன்றிக் கடன்செலுத்தாமல் இருக்க எதிர்பாராதோர் ஆண்டவரிடம் நன்றி கூற வருவது வேதனையோடு கூடிய நற்செய்தியாக அமைகின்றது.

நாமான் என்னும் ஓர் அந்நிய நாட்டுப் படைத்தளபதி தொழுநோயினால் பீடிக்கப்பட்டிருந்தார். எலிசா என்ற இறைமனிதரின் ஆலோசனைப்படி யோர்தானில் ஏழு முறை குளித்து குணம் பெறுகிறார். இதன் மூலம் இஸ்ரவேலின் உண்மைக் கடவுளை வழிபடுவதாக வாக்குப்பண்ணி தன் அந்நிய தெய்வங்களைக் கைவிடுகிறார். அதே வேளையில் எதிர்பார்க்கப்பட்ட இஸ்ரவேல் இனத்தினர் அந்நிய தெய்வங்களைத் தேடும் கடின இதயம் கொண்ட நன்றியீனராய் இருந்தனர். இதுதான் இறைவனின் வேதனை. பத்துத் தொழு நோயாளரும் குணமடைந்தாலும் இயேசுவுக்கு நன்றி கூற, அவர்முன் மண்டியிட, எதிர்பராதர, அந்நியனைத் தவிர வேறு யாரையும் காணேமே என்பது இயேசுவின் வேதனை.

எம் நன்றி இறைவனுக்குத் தேவை என்பதுவல்ல, நாம் நன்றி கொண்டவராய் வாழ வேண்டும் என்பதுதான் இயேசுவின் எதிர்பார்ப்பு. செய்நன்றி மறப்பவர் மனிதராய் வாழத் தகுதியற்றவர் என்பது வள்ளுவர் வாக்கு. ஆதிக்காலக் கிறிஸ்தவர் அடிக்கடி ஆலயத்தில் ஒன்று கூடினர். அது அவர்கள் உள்ளத்தில் வளர்ந்த நன்றிப் பெருக்கின் வெளிப்பாடு. நற்கருணை வழிபாடு என்றாலே நன்றியறிதல் என்று பொருள்படும்.

இன்று ஏன் ஆலயத்திற்கு நாம் செல்வதில்லை? சென்றாலும், ஏன் செல்லுகிறோம்? சிலர் ஆலயத்திற்குப் பிந்தி வந்து முந்திச்செல்ல விரும்புகின்றனர். சிலர் களியாட்டாக, வேறு சிலர் கட்டாயமாக இன்னும் சிலர் பொழுது போக்காகக் கருதுகின்றனர். வழிபாடும், பக்திமுயற்சிகளும் நன்றியினதும், நம்பிக்கையினதும் வெளிப்பாடாக அமைய வேண்டும்.

இறைவனுக்கு நாம் செலுத்தும் நன்றி அவர் நன்மை செய்யப் பயன்படுத்தும் கருவிகளான அயலவர் மட்டில் விரிந்து செல்லவேண்டும். 'நன்றி' என்ற சொல் உள்ளத்தின், ஆழத்தில் இருந்து புறப்படும்போது உறவுகளுக்கு உரமாகிறது. யாராயினும், செய்த உதவி சிறியதோ, பெரியதோ அதை நினைந்து உரிய நேரத்தில் நன்றிக்கடன் செய்வது மனித உள்ளங்களை மகிழ்விக்கிறது. நன்றியை எதிர்பார்ப்பதை விடுத்து நன்றி உள்ளம் கொண்டவராய் சொல்லிலும், செயலிலும் அதை வெளிப்படுத்த முயலுவோம். மலர்- தேனாகவும், வான்- மழையாகவும், நிலம்- பயிராகவும், நீர்- வளமாகவும், மரம்- நிழலாகவும்... இயற்கை முழுவதும், நன்றிப் பாவின் எதிரொலிகளாக விளங்க மனிதனாகிய நான் கூறும் நன்றி என்ன?

சுவாமி. ஜீவா போல் அ.ம தி.

2 அர. 5: 14–17 நாமான் ஆண்டவரை ஏற்றுக் கொண்டான்
திமோ. 2: 8–13 இறை வார்த்தைக்கு விலங்கெதுவுமில்லை.
லூக். 17: 11–19 அந்நியன் கடவுளை மகிமைப்படுத்தினான்.
(28-வது ஞாயிறு 15–10–89)

## கலைநிலா

### ஓவியர் S. அடைக்கலமுத்து (ஓர் அறிமுகம்)



குழமங்கால் மல்லாகத்தைச் சேர்ந்த பிரபல ஓவியர் S. அடைக்கலமுத்து அவர்களை யாழ்நகரில் அனைவரும் நன்றாக அறிவர். இவர் கரம்பனைச் சேர்ந்த திரு சூசைப்பிள்ளை- இன்னேசியா தம்பதிகளுக்கு கடைசி மகனாகப் பிறந்தார். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் தனது ஆர்வத்தால் விடா முயற்சியுடன் பயின்று ஓவியகலையில் முன்னணிக்கு வந்தவர். நாடகங்களுக்குரிய காட்சியமைப்புக்கள், சிகரங்கள், விளம்பரப்பலகைகள் ஆகியவற்றை கண்கவர் முறையில் ஆக்கும் மக்கள் மத்தியில் பிரபல்யமான ஓர் சிறந்த கலைஞன். இவரை ''கலைநிலா'' வில் அறிமுகம் செய்துவைக்கும், செவ்வி கீழ் தரப்படுகின்றது.

கேள்வி:-உங்களுடைய முயற்சி தொழில் ரீதியாக அமைந்ததா அல்லது இயல்பான ஆர்வத்தால் உருவானதா?

பதில்:- நான் ஆரம்பத்தில் எனது குடும்ப பொருளாதாரத்திற்காக ஒரு அச்சகத்தில் வேலை செய்தேன். அவ்வேளை நான் தங்கியிருந்த விடுதியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஓவியர் சோமசுந்தரம் அவர்களும், கூடஇருந்தார். அவர் ஓவியங்கள் வரையும் பொழுது அவருடன் கூடநான் உதவுவதுண்டு. பின்னர் எனக்கு ஓவியத்தில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக அச்சகத்தொழிலைக் கைவிட்டு எனது புலனை முழுமையாக ஓவியத்தில் செலவழித்தேன். அக்காலகட்டத்தில் எனது வருவாய் குறைவாக இருந்தது. எனது குடும்பத்தின் பொருளாதார நிலையை சமாளிக்க பக்கத் தொழிலாக கொழும்பு ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன். மிகுதி நேரம் முழுவதும் ஓவியத்திற்காக செலவழிக்கப்பட்டது. எனது இந்த முயற்சி தொழில் ரீதியானது என்பதைவிட ஆர்வத்தால் ஏற்பட்டது என்பதே சரியானதாகும். எந்தத் துறையாயினும், சரி இயல்பான ஆர்வமின்றி பலவந்தமாக செய்யமுடியாது என்பது எனது கருத்தாகும்.

(தொடரும்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### 5. விலக்கப்பட்ட கற்கள்...

தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கள்...
தம்மைத்தாமே உடைத்துக் கொண்டதால்
விலக்கப்பட்டவைகள்
முன்னணிக்கு வந்தன.

பிள்ளைகள் உணவு வேண்டாமென பிடிவாதம் செய்ததால்
நாய்களுக்கே விருந்து பரிமாறப்பட்டது.

அழைக்கப்பட்டவர்களுக்கு
அலுவல்கள் பல இருந்ததால்
ஏழைகள், ஊனர்கள்
குருடர், முடவர்
வீதியில் நின்றவர்
விருந்தினை உண்டனர்.

ஆம், யூதரைவிட புறஇனத்தவர்கள்
இயேசுவின் செய்தியை இலகுவில் ஏற்றனர்.
இரண்டு நிகழ்ச்சிகள் இதற்குக் காலாய் அமைந்தன.

ஒன்று,
எத்தியோப்பிய அமைச்சன்.
அந்த அண்ணகனின் ஞானஸ்நானம்.
மற்றையது,
உரோமையன் கொர்னேலியுவின் திருமுழுக்கு.

ஒருநாள்,
திருத்தொண்டருள் ஒருவரான பிலிப்பு
ஆவியின் ஏவுதலுக்கு உட்பட்டவராக
ஆள் நடமாட்டமற்ற பாதை வழியே சென்றுகொண்டிருந்தார்.
அப்பொழுது,
அவ்வழியாக,
எத்தியோப்பிய அரசியின் பொருளமைச்சன்
ஓர் அண்ணகன்
தேரின்மேலேறி வந்துகொண்டிருந்தான்.
அவன் இறைவாக்கினர் இசையாசின் ஏடுகளைப்
படித்த வண்ணமாயிருந்தான்.
அவனறிந்தது யூதமறையின் அரிவரி.
அவனால் அவ்வேடுகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை.
பெரிதும் குழம்பியிருந்தான்.
பிலிப்புவோ தேரை அண்டி,
"படிப்பதன் பொருள் உமக்கு புரிகிறதா?"
என்று கேட்க அவன்,
'யாராவது எடுத்துச் சொன்னாலன்றி எப்படி விளங்கும்' என்றான்
இசையாசின் திருநூலில் தளமிட்டு
வேறு மறை நூல்கள் துணைகொண்டு,
இயேசுவைப்பற்றி,
அவரது பாடுகள், மரணம், உயிர்ப்புப்பற்றி,
கல்லும் கரையும் விளக்கம் தந்தார் பிலிப்பு.
தேரோடும் வழியில் ஒரு குளம் வந்தது.
அப்போது அண்ணகன்,
"இதோ தண்ணீர் இருக்கிறது.
நான் ஞானஸ்நானம் பெறத் தடையென்ன?"
என்று கேட்க,
பிலிப்பு அவனுடன் நீரில் இறங்கி திருமுழுக்களித்தார்.
பின்னர் இருவரும் தத்தம் வழி சென்றனர்.

சில நாட் பின்னர்,
யோப்பாவில், செபத்தில் இருக்கையில்
இராயப்பர் ஒரு காட்சி கண்டார்.
கூடவே,
"இராயப்பா! எழுந்து அவற்றைக் கொன்று சாப்பிடு"
என்ற குரலும் கேட்டது.
இராயப்பரோ,
"தீட்டானதெதையும் நான் உண்பதில்லை" என மறுத்தார்.
அக்குரலோ
"சுத்தம் என்று கடவுள் சொன்னதை
தீட்டு என்று சொல்லாதே" என்றது.

அப்போது சிலர் இராயப்பரைத் தேடி வந்தனர்.
அவர்கள் உரோமையன் கொர்னேலியுவின் ஆட்கள்.
இராயப்பரை அழைக்கும்படி காட்சியில் கண்டு
அவன் அவர்களை அனுப்பியிருந்தான்.
ஆவி ஏவவே இராயப்பரும் அவர்களோடு சென்றார்.
தன் காட்சியின் பொருளை விளங்கிய அவர்
அருளுரை ஆற்றி
கொர்னேலியுவிற்கும் அவனை சார்ந்தவருக்கும் திருமுழுக்கு
அளித்தார்.
அவர்களும் ஆவியைப் பெற்றனர்.

இப்புறவினத்தார் பணியை பெரிதும் தொடர்ந்தவர் சவுல்.
அவரது கதை விந்தையானது.

# திருச்செபமாலையும் அதன் வரலாறும்

ஐப்பசி மாதம் வந்தால் அன்னையின் பிள்ளைகளுக்கு எப்பசி வரும்!! அன்னையின் அன்புப் பிள்ளைகளுக்கு செபமாலைப்பசி வரும். இம்மாதத்தைச் செபமாலையின் மாதமென்று திருச்சபையே எமக்குக் கொடுத்திருக்கிறது. அன்னையின் அன்புப் பிள்ளையானது அவளுக்குப் பிரியமான செபமாலையை இம்மாதத்தில் மிகப் பக்தியோடு செபிக்கிறது. இம்மாதத்தில் விசேடமாய் அன்னையின் 'அருள் நிறை' நாமம் குடும்பங்களில், ஆலயங்களில் பத்திச்சபைகளில் அன்போடு அரங்கேறுகிறது.

திருச்செபமாலையானது மனச்செபம், வாய்ச்செபம் என்னும் இருபகுதிகளைக் கொண்டது. யேசுவினுடையவும், தேவதாயினுடையவும், வரலாற்றுச் சம்பவங்களான, வாழ்வு, மரணம், மகிமை ஆகியன பற்றிய தேவ இரகசியங்களைப் பற்றித் தியானிப்பதே செபமாலையின் மனச்செபமாகும். விசுவாச மந்திரத்துடன் தொடங்கி செபமாலையின் நூற்று ஐம்பத்து மூன்று அருள் நிறை மரியேகளையும், பதினூறு பரலோக மந்திரங்களையும், பதினூறு திரீத்துவப் புகழ்களையும் வாய்மொழியாக ஓதி யேசுநாதரும், தேவ நாயும் அப்பதினைந்து காரணிக்கங்களிலும் அனுசரித்த பிரதான புண்ணியங்களைத் தியானிப்பதே வாய்ச்செபமாகும். வாய்ச்செபமான இவையெல்லாம் ஒரு சங்கிலியில் சேர்க்கப்பட்ட மணிகள் மூலம் கணிக்கப்படுகின்றன. ஆகவே செபமாலையானது தியானமும் வாய்ச் செபமும் ஒருங்கிணைந்த ஒரு சிறந்த பக்தி முயற்சியாகும்.

தேவ இரகசியங்களைப் பற்றித்தியானிப்பதற்குக் குறிக்கப்பட்ட ஒழுங்குகள் கிடையாது. ஓவ்வொருவரும் தமக்கு விருப்பமான முறையில் இத்தியானத்தை செய்து கொள்ளலாம்.

தேவதாயின் செபமாலை பின்வரும் காரணங்களைக் கொண்டு ஐந்து பத்துக்களைக் கொண்ட மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. பரிசுத்த திரீத்துவத்தில் மூன்று ஆட்களையும் மகிமைப்படுத்துவதற்காக.
2. யேசுக்கிறிஸ்துவின் வாழ்வு மரணம். மாட்சி ஆகியவற்றை மகிமைப்படுத்துவதற்காக.
3. விண்ணில் வெற்றிபெற்ற திருச்சபையைப் பின்பற்றி, மண்ணில் போராடும் திருச்சபையோர்க்குத் துணைபுரிந்து உத்தரிப்பு ஸ்தலத்தில் துன்புறும் திருச்சபையின் வேதனையைக் குறைப்பதற்காக.

ஒரு முழுச் செபமாலைக்கு பதினைந்து பத்துக்கள் சொல்ல வேண்டியது அவசியம் என்றாலும் குடும்பங்களிலே ஐந்து பத்துக்களைச் சொல்லுவது தான் வழக்கமாகி விட்டது, எனவே ஐந்து பத்துக்களைக் கொண்ட ஐம்பத்து மூன்று மணிச் செபமாலை தினம் ஜெபித்திடுவோம்.

செபமாலையைக் குறிக்கும் ROSARY (ரோசறி) என்னும் ஆங்கிலச் சொல் ரோசா மலர் முடி' என்னும் பொருளுடையதாகும். அதாவது செபமாலையை மக்கள் பக்தியுடன் செபிக்கும் ஒவ்வொரு வேளையும் நூற்றைம்பத்து மூன்று சிவந்த ரோசாக்களும் பதினூறு வெண்மையான ரோசாக்களும் கொண்ட ஒரு மலர் முடியை யேசுநாதருக்கும், தேவதாய்க்கும் சூட்டுகிறார்கள் என்று கூறலாம். இவை தெய்வீக மலர்கள். எனவே இவை வாடா மலர்கள். தமதெழில் என்றும் இழக்கா அழகிய மலர்கள். செபமாலைக்கு வழங்கப்பட்டு வரும் இப்பெயரை தேவதாய் அங்கீகரித்துள்ளாள். ஓவ்வொரு 'அருள் நிறை மரியே' என்ற செபம் ஒரு மலர் என்பதையும் முழுமையான ஒரு செபமாலை அவருக்கு ஒரு மலர் முடியாக அமைகிறதென்பதையும் அவள் பலருக்கு வெளிப்படுத்தியிருக்கிறாள்.

புனித பிரான்ஸிஸியாரின் வரலாற்றில் அவரோடிருந்த இளம் துறவி ஒருவர் வழமை போல் ஒரு நாள் இராவுணவிற்கு முன் செபமாலை சொல்லச் சென்றார். நீண்ட நேரமாகியும் அவர் வராத காரணத்தால் முன் ஒருவர் பின் இருவராக மூன்று வேறு துறவிகள் அவரை அழைத்து வரச்சென்றனர். அம் மூன்று துறவிகளும் கண்ட காட்சி; தேவதாய் தெய்வீக ஒளியில் இரு தூதருடன் நிற்க, இளந்துறவியின் வாயிலிருந்து வெளிவந்த ஒவ்வொரு 'அருள் நிறை மரியே' என்ற செபமும் ஒரு அழகிய ரோசா மலராக மாற தூதரிருவரும் அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து தேவதாயின் சிரசில் சூட்டிக் கொண்டிருந்தனர்.

அவள் அவற்றை புன்னகையுடன் ஏற்றாள். செபமாலை முழுவதும் செபித்து முடியும் வரை தேவதாய் அங்கிருந்தாள்.

"ரோசா மலர் மலர்களுட் சிறந்தது அப்படியே திருச்செபமாலை பக்தி முயற்சிகளுட் சிறந்ததும் முதன்மையானதுமாகும்"

தேவதாயின் பக்தி அப்போஸ்தலர் காலத்திலிருந்தே ஆதித்திருச்சபையிலும் இருந்தது. பரலோக மந்திரமும், அருள் நிறை மரியேயும் விசுவாசிகளின் முதற்செபமாக, முதற் பக்தி முயற்சியாக அப்போஸ்தலர் காலத்திலிருந்தே பல நூற்றாண்டுகளாக வழங்கி வந்துள்ளது எனக் கருதப்படுகிறது. நாம் அறிந்தவரையில் புனித சாமிநாதர் தான் இதன் முன்னோடியாக இதைத் தொடக்கி வைத்தவராக இருக்கிறார். பரம்பரைப்படி பிரான்ஸ் நாட்டில் 1206ம் ஆண்டு ஆடி மாதம் 21ம் திகதி 'புரோயில்' (Our Lady of prouille) என்ற மாதா பீடத்தின் முன் தேவதாய் புனித சாமிநாதருக்கு செபமாலையைக் கொடுத்தார். அன்று திருத்தந்தையாக விருந்த 3ம் இனசென்ட் புனிதசாமிநாதரை "அல்பீஜென்சியன்" தப்பறையை எதிர்க்கப் பிரான்சிற்கு அனுப்பினார். அல்பீஜென்சியரையும், ஏனையபாவிகளையும், மனம் திருப்புவதற்கு ஒரு சக்தி வாய்ந்த சாதனமாக தேவதாயே அதைக் கொடுத்தார். அவள் கூறியது. உன்னை முறையிடச் செய்யும் தீமைகளை ஒழிய வேண்டுமானால் இக்கடின உள்ளங்களைத் தொட்டு அவற்றை இறைவன் பக்கம் திருப்பவேண்டுமானால் இன்றிலிருந்து மீட்பின் மறைபொருளை உலகிற்கு அறிவித்த வானதூதரின் 'அருள் நிறை மரியே' என்ற செபத்தைச் சொல்லிக் கொண்டு எனது திருக்குமாரனின் வாழ்க்கை, மரணம், மகிமை ஆகியவை பற்றித் தியானிக்கவேண்டும்" என்றாள்.

அன்றிலிருந்து இன்றுவரை தேவதாய் பற்பல வழிகளில் செபமாலையின் மகத்துவம், அவற்றின் வல்லமை பற்றி மக்களுக்கு அறிவித்து வருகிறாள். இப்பக்தி முயற்சியைப் பக்தியோடு செபிப்பவர்களுக்கு அருள்வழமீந்து வருவதோடு அதை அசட்டை செய்பவர்கள். பக்தியோடு செபிக்காதவர்களை எச்சரித்தும் வந்துள்ளாள் அதற்குப் பல சான்றுகள் உள்ளன. எல்லாவற்றிலும் மேலாக 1858ம் ஆண்டு லூர்து கெபியில் புனித பெர்னதேத்தம்மாளுக்கும், 1917ம் ஆண்டு பத்திமா பதியில் லூசியா, யசிந்தா, பிரான்சீஸ் என்ற சிறுவர்களுக்கும் காட்சியளித்து செபமாலையின் மகத்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளாள். அவ்வேளை அவர்கள் செபமாலை சொல்லத் தூண்டியுள்ளாள்.

தேவதாய் 'திருச்சபையின் தாய்' அவள் 'உலகின் தாய்' 'எம் தாய்' நாம் அனைவரும் சாத்தானின் சூழ்ச்சிகளை வென்று விண்ணைச் சுதந்தரிக்க வேண்டுமென்று விரும்புகிறாள். அவள் சாத்தானின் தலையை நசுக்கியவள். நாமும் சாத்தானை வெல்ல செபமாலையை விடச் சிறந்த ஆயுதமில்லை இவ்வுலகின்மீது தேவதாய்க்குரிய அக்கறையும், அன்பும் பரலோகம் சென்றதோடு நின்றுவிடவில்லை. மக்களைக் கடவுள் பாதம் இட்டுச்செல்ல வேண்டிய பொறுப்பு இன்னமும் அவளுடையதுதான். இவ்வுன்னத பணியைச் செய்ய மக்களின் உதவியை நாடுகிறாள். அச்சிறந்தவழி செபமாலை ஒன்று தான். எனவே கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமின்றி அமலன் அடிசேர உதவுவது திருச்செபமாலையைவிட வேறெது? வாழ்க! அன்னை நாமம் - வளர்க! அவள் புகழ்.

அருட் திரு.
லூயிஸ் மொன்போட்

## மறை பரப்பும் அப்போஸ்தலன்

அன்பு நிறைந்த உள்ளம், பொங்கிவழியும் தியாகம் துன்பம் தீர்க்கும் துடிப்பு, பொதுநலத்தின் சேவை இவையனைத்தும் சேர்ந்த சிறந்த செப வாழ்வைக் கொண்டவனே நல்ல மறைபரப்பும் அப்போஸ்தலனாவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறை அறிவிப்புத் தினம்

# திருத்தந்தையின் செய்தி 22-10-1989



## பெந்தக்கோஸ்தே தினத்தன்று

அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே!

பெந்தெகோஸ்தே தினத்தன்று திருச்சபையின் பணி ஆரம்பமாகியது. அன்று ஜெருசலேமில் கூடியிருந்த யாத்திரிகர் கூட்டத்துக்கு உயிர்த்த கிறிஸ்துவைப் பற்றி அப்போஸ்தலர் எடுத்துரைத்த செய்தியை பல்வேறு கலாசாரங் ளின் பிரதிநிதிகளாய் சமூகமளித்திருந்த அவர்கள் தத்தம் மொழியில் கேட்டு மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். இது புதிய இறைமக்களின் உலகளாவிய தன்மையை முன் கூட்டியே எடுத்துக்காட்டுகிறதெனலாம். திருச்சபையினது நற்செய்தியை அறிவித்து மறைபரப்பும் அழைத்தலின் பலன் தரும் ஊற்றாகிய பெந்தெகோஸ்தேயின் ஆவியிலும், அருளிலுமே நான் வருடாந்த மறைபரப்பு தினத்துக்கான எனது செய்தியை உங்களுக்கு அளிக்கிறேன்.

செபம், மறையறிவூட்டுதல், மறைபரப்புக்கு உதவுவதற்காக நிதி திரட்டுதல் ஆகியவற்றோடு இத்தினத்தைக் கொண்டாடுவது நற்செய்தி அறிவிப்பதற்காக உலகெங்கும் செல்லவேண்டிய கடமை பற்றி முழுத் திருச்சபைக்கும் நினைவூட்டுகிறது. மீண்டும் வரும் இத்தினத்தில், திருநிலையினர், விசுவாசிகள் அடங்கிய இறைமக்கள் அனைவருக்கும் மறைபரப்பின் ஆவியாகிய தூய ஆவி மீண்டும் அளிக்கப்படுவாராக, சிலுவைப் பலியில் வேரூன்றியுள்ள மீட்புப் பணியை இப்போது இவரே தொடர்ந்து நடத்துபவராவார். யேசு அப்பணியைத் திருச்சபையிடம் ஒப்படைத்தார். ஆனல் தூய ஆவியே மனித ஆன்மாவிலும், உலக வரலாற்றிலும், இப்பணியை நிறைவேற்றும் அறிவுகடந்த முதன்மைக் கருத்தா ஆவார்.

**1 தொல்குடிக் குருக்கள்-மறைபரப்பும் திருச்சபையின் நம்பிக்கை.**

இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுவது போல் (திருச்சபை 9) ''தனித்தனியாக ஒருவருக்கொருவர் தொடர்பேதுமற்ற முறையில் மக்களைப் புனிதப்படுத்தவும் ஈடேற்றவும் இறைவன் விரும்பவில்லை.'' மாறாக ஒரே குலமாக, கிறிஸ்துவைத் தலைவராகக் கொண்டு திருச்சபையில் ஒன்றித்த ஒரு மெசியா மக்களாக அவர்களை ஈடேற்ற விரும்பினார். இதனை வட்டாரத் திருச்சபையில் காணலாம். ''தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஆண்டவரது மந்தையின் பகுதியை ஆயரின் அதிகாரத்தின் கீழ் புனிதப்படுத்தி ஆளும் அவர்கள் அனைத்துலகத் திருச்சபையை தங்கள் வட்டாரத்தில் காணக்கூடிய முறையில் விளங்கச் செய்கிறார்கள்'' (திருச்சபை 28) நற்செய்தியைப் பரப்புவதும், இறைமக்களைப் புனிதப்படுத்தி ஆட்சி செய்வதும் வர்களது பணியாயிருப்பதோடு, அதற்குரிய அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

## பெந்தக்கோஸ்தே தினத்தின் பின்

பெந்தெகோஸ்தே தினத்தின் பின் அப்போஸ்தலர் நற்செய்தி அறிவித்ததன் விளைவாக, திருமுழுக்குப் பெற்றோர் சமூகங்கள் எழலாயின, இச்சமூகங்களின் ஒருமைப்பாட்டைக்காக்கவும், ஒவ்வொரு உறுப்பினரையும் விசுவாசத்தில் உருவாக்கவும் நற்கருணைச் சடங்கை நிறைவேற்றவும், அப்போஸ்தலரோடும், ஏனைய கிறிஸ்தவ சமூகங்களோடும், ஒன்றிணைவை ஏற்படுத்தவும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டனர். உலகில் திருச்சபை பரவ ஆரம்பித்த காலத்தில் அப்போஸ்தலர்கள் செய்ததே இன்று மறைபரப்பாளரின் நற்செய்திப்பணியின் மூலம் தொடர்ந்து நடைபெறுகின்றது. உண்மையில் ''ஒரு சபையை நிறுவுவதற்கும் ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தை வளர்ப்பதற்கும் பல்வேறு பணிகள் தேவைப்படுகின்றன. இப்பணிகள் விசுவாசிகளின் இக் குழுக்களிலிருந்தே தேவ அழைத்தலினல் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றை ஒவ்வொருவரும் கருத்தோடும், கவனத்தோடும் பேணிவளர்க்க வேண்டும். குருக்கள், திருத்தொண்டர் உபதேசிமார் ஆகியோரின் அலுவல்கள் இப்பணிகளைச் சார்ந்தவையாகும்' (திருச்சபையின் மறைபரப்புப் பணி)

இளம் கிறிஸ்தவ சமூகங்களில் தொல்குடிக் குருக்கள் இருக்கவேண்டியதன் அவசியத்தையும், நன்மையையும் இச்செய்தியில் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தொல்குடிக் குருக்களின் உருவாக்கத்தையும், வளர்ச்சியையும் பற்றிய வரலாறு மறைபோதகரின் நற்செய்திப்பணி அபிவிருத்தியடைந்தமையைக் காட்டுகின்றது. (பாப்புமார் இதில் எப்பொழுதும் விசேட கரிசனை காட்டி வந்துள்ளனர்) அனைத்துலக திருச்சபையின் ஆயர்கள் என்ற முறையில், மறைபோதக நாடுகளில் உருவாகியுள்ள புதிய சமூகங்களுக்கு போதிய குருக்கள் கிடைப்பதற்கும், கூடிய விரைவில் சுதேசக் குருக்களும், ஆயர்களும் கிடைப்பதற்கும் இது வழிவகுக்கும்.

இது 15ம் ஆசீர்வாதப்பர் முதல் குறிப்பாக இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாப்புமார்களால் ஊக்குவிக்கப்பட்டது. 15ம் ஆசீர்வாதப்பர் தமது Maximum Illud என்னும் அறிவுரையில் (இது வெளியிடப்பட்ட 60ம் ஆண்டைக் கொண்டாடுகிறோம்.) ''மறைபரப்புத் தளத்துக்குப் பொறுப்பாயுள்ளவர் முதன்மையாக சுதேசக் குருக்களின் நல்ல உருவாக்கத்தில் கரிசனை காட்ட வேண்டும். 'புதிய கிறிஸ்தவ சமூகங்களின் பெரு நம்பிக்கைகளனைத்தும் இதிலேயே தங்கியுள்ளன'' எனக் கூறியுள்ளார்.

சுதேசக் குருத்துவம் தழைத்தோங்குவது மறைபோதகரது உழைப்பின் பயனாகும். இம் மறைபோதகர் மிகுந்த பொறுமையோடும், விடா முயற்சியோடும், சில சமயங்களில் உயிரைத்தன்னும் தியாகம் செய்து, புதிய கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்குவதற்கும் பாடுபட்டு உழைத்தனர். குடும்பங்களிலே குருத்துவ சந்நியாச மறைபோதக வாழ்வுக்கு அழைத்தல்களை உருவாக்க முயன்றனர். இப்போது அவர்கள் சுதேசக்குருக்கள், ஆயர்களுடன் சேர்ந்து பணிபுரியவும், உடனுழைப்பாளராக விளங்கவும் விரும்புகின்றனர். இறையரசு என்னும் பொது நோக்கம் நற்செய்தித் தூதுவரான இரு அணியினரையும் நெருக்கமாக இணைக்கிறது. இத்தகைய உடனுழைப்பு அவசியமாகவும் நிச்சயமாகப் பலனுள்ளதாகவும் இருக்கின்றது. திருச்சபையின் ஐக்கியத்தைப் புலப்படுத்தும் ஒரு பொருத்தமான ஒத்திசைவாக இது இருக்க வேண்டும்'' (1973ம் ஆண்டு மறைபரப்புத் தினத்துக்கான 6ம் சின்னப்பரின் செய்தி)

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் மறைபோதக வரலாற்றில் ஒரு புதிய காலம் ஆரம்பித்துள்ளது. திருச்சபை இயல்பிலேயே மறைபோதக அலுவலைக் கொண்டுள்ளது, ஒவ்வொரு தனித்திருச்சபையும் அனைத்துலக திருச்சபையின் சாயலைத் தன்னகத்தே உருவாக்கும்படி அழைக்கப்பட்டுள்ளது. இதனுல் 'புதிய திருச்சபைகளும் கூடிய விரைவில் திருச்சபையின் அனைத்துலக மறைப்பணியில் பங்கு கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றன. தமக்கே குருமார் பற்றாக்குறை இருந்த போதிலும், அவை தமது சொந்த மறைபோதகரை உலகெங்கும் நற்செய்தியைப் போதிக்கும்படி அனுப்புதல் நன்று. தாமே பிறநாடுகளின் மறைபரப்புப்பணியில் செயல் முறையில் பங்குகொள்ளும் பொழுது அனைத்துலகத் திருச்சபையோடு இவர்கள் கொண்டுள்ள ஒன்றிப்பு முழுமை பெறும், (திருச்சபையின் மறைபரப்புப்பணி 20) எல்லாவற்றிலும் மேலாக குருக்களை மறை போதக ஆர்வத்தினுல் தூண்டப்பட்டு, தமது சொந்த மறைவட்டத்தில் மட்டுமல்லாது, ஆயர் விரும்பும் பொழுது அம்மறைவட்டத்துக்கு அப்பாலும் சென்று மறைபோதகம் செய்யத் தயாராயிருக்க வேண்டும்.

## புனித இராயப்பர் சபை நூற்றாண்டில்

**2 அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபை: சுதேசக் குருக்கள் சேவையில் 100 ஆண்டுகள்**

இந்த ஆண்டு அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபை தனது நிறுவனத்தின் 100வது ஆண்டு விழாவைக் காண்கின்றது. பொளீன் ஜரிக்கோவின் அன்புள்ளத்திலிருந்து விசுவாசப்பரப்புதல் சபை பிறந்தது போல், தாயும் மகளுமான வேறு இரு பெண்கள், அதாவது ஸ்டெபனி, ஜியான் பிகாட் ஆகியோரின் தியாக உள்ளத்திலிருந்து மறை பரப்புப்பணிக்கான இந்த மற்ற சபையும் தோன்றலாயிற்று. நாகசாக்கி ஆயராகிய மன்சிஞ்ஞோர் கூசின் என்பவர் தமது ஆதரவாளரும் உடனுழைப்பாளருமான திருமதி பிகாடுக்கு 1889 ஜூன் 1ம் திகதி எழுதிய கடிதமே இச்சபை ஆரம்பிக்க வழிகோலியது. குருக்களின் பயிற்சிக்குத்தேயையான நிதி இல்லாத காரணத்தால் குருமடத்தில் சேர விரும்பிய எத்தனையோ இளைஞர்களை ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறதென அவர் அக்கடிதத்திற் குறிப்பிட்டிருந்தார். திருமதி பிகாடும் அவளது மகளும் அக்கடிதத்தில் இறை சித்தத்தின் அழைப்பைக் கண்டனர். இந்த அழைப்பு அவர்களது வாழ்க்கையையே மாற்றிவிட்டது. மறைபோதக நாடுகளில் குருமடங்களிற் சேர ஆவலுடன் முன்வரும் பெருந்தொகையான இளைஞர்களுக்கு உதவி புரிவதற்காக அவர்கள் ஈவு சோர்வின்றி நிதி திரட்டத் தொடங்கினர். உதாரகுணம் வாய்ந்த இவ்விரு பெண்களும் பல இடையூறுகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. ஆனல் மேற்கொண்ட பொறுப்பிலிருந்து அவர்கள் சற்றும் பின் வாங்கவில்லை. மரணம் வரை அவர்கள் பிரமாணிக்கத்துடன் உழைத்தனர். தாம் ஆரம்பித்த சபையை உரோமை ஆட்சிப் பீடம் அங்கீகரித்து ஆசீர்வதித்தது கண்டு மகிழ்ச்சியுற்றனர்.

இச்சபை நிறுவப்பட்டு நூறு ஆண்டுகளாகியும் அது என்ன நோக்கத்திற்காகத் தோன்றியதோ, அதன் மதிப்பீடுகள் கெடாது பாதுகாத்துவருகிறது. அதாவது ''மறைபோதக திருச்சபைகளில் சுதேசக் குருக்களைப் பயிற்றுவதிலுள்ள பிரச்சனைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும், தமது ஆன்மீக, பொருளாதார உதவிகளால் மாணவர்களை குருத்துவத்திற்கு பயிற்றுவதற்குத் துணை புரியுமாறு அழைப்பதுமாகும்'' (மறைபோதக சபைகளின் விதிகள் 15)

அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையை இச்செய்தியில் நினைவு கூர்ந்து பரிந்துரைக்க விரும்புகின்றேன் இது எனது கடப்பாடு மட்டுமல்ல, எனது சொந்த ஆவலுமாகும். இச்சபையானது சுதேசக் குருக்களின் வளர்ச்சிக்கு பேருதவி புரிந்துள்ளது. இப்போதும் நிதியுதவி அளிப்பதில் அது முக்கிய பங்கு வகித்து வருகிறது. இதன் மூலம் இளந் திருச்சபைகளிலுள்ள குருமடங்களும், உருவாக்க நிறுவனங்களும், உயர்கல்வி நிலையங்களும் மறைப்பணி புரிவதற்குத் தேவையான சுதேசக்குரு மாணவர்களை ஏற்று, தக்க விதத்தில் அவர்களைப்பயிற்றக் கூடியதாக இருக்கிறது.

தமது செபங்களினுலும், காணிக்கைகளினுலும் இச்சபையின் பணிகளில் பங்கு பற்றும் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், பூரண ஈடுபாட்டுடன் மறைபோதக அலுவலுக்குத் தம்மை அர்ப்பணித்த ஸ்டெபனி, ஜியான் பிகாட்டை கருவியாகக்கொண்டு இறைவன் ஆற்றிய அற்புதங்களுக்காக அவரைப்போற்றும்படி அனைவரையும் அழைக்கின்றேன். நான் ''பெண்ணின் மகத்துவம்'' என்ற எனது திருமடலில் கூறியதுபோல் வரலாற்று நிகழ்வுகளிற் காணப்படும் பெண்கள் மேதகவுக்காக திருச்சபை நன்றிசெலுத்துகிறது. திருமதி பிகாட், ஜியான் பிகாட் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டசபையின் பலனுக நற்செய்தி பரவியதையும் புனிதத்தன்மை ஏற்பட்டதையும் கருத்திற் கொள்ளும் போது அது நன்றி செலுத்தாமலிருக்க முடியாது. திருச்சபையின் சகல அங்கத்தினரும் குருத்துவ மறைபோதக அழைத்தல்களை ஊக்குவிக்கவும் நற்செய்தி அறிவிக்கவும் முயற்சிக்கவேண்டும்

அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையானது நற்செய்திப் பணியில் குருக்களின் வேலை ஈடுசெய்ய முடியாதது என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. விசுவாச வாழ்வில் தம்மை வழிநடத்தவும் மறைபோதக மனப்பாங்கில் வளரவும் கிறிஸ்தவ சமூகங்களுக்கு குருக்களின் உதவி தேவைப்படுகிறது.


அனைத்துலக மறைபோதகப் பணிமுழுத் திருச்சபையினதும் முன்னிலையில் வைக்கும் மிக முக்கியமான அறைகூவல் என்னவெனில் அழைத்தல்கள் கிடைக்கக்கூடிய இடங்களிலெல்லாம் அதாவது குருத்துவநிலை, துறவுநிலை அல்லது பொதுநிலையில், அழைத்தல்களைப் பேணுவதாகும். ''உலகில் நற்செய்திப்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இயக்குநரின் செய்தி

## கிறிஸ்துவின் மீட்புப்பணி தொடருகின்றது....



அன்புச் சகோதரரே,

இன்று நாம் மறைபரப்பு ஞாயிற்றைக் கொண்டாடுகின்றோம். வழக்கம் போல உங்கள் சிந்தனைக்கு சில கருத்துக்களை முன்வைக்கவும், உலகத் திருச்சபை நச்செய்திப் பணியை ஆற்றுவதில் இன்று எதிர்நோக்கும் தேவைகளையும், கவலைகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகின்றேன்-

நற்செய்திப் பணியானது எமதாண்டவரால் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட மீட்பு வேலையின் இன்றியமையாத அம்சமாக உள்ளதென்பதை நீங்கள் அறிவீர்கள். ''நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள். இதோ 'நான்' உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்.'' (மத். 28: 18-20). ஆகவே அது மீட்பு வேலையின் ஒரு பகுதி மட்டும் அல்ல, அதன் இன்றியமையாப் பண்புமாகும்.

உண்மையாகவே, திருச்சபை இந்த விதத்தில் கிறிஸ்து உலகில் ஆற்றுவதற்கு வந்த பணியை தன்னில்தானே செயலுருவாக்கிக்கொண்டு மனித வரலாற்றில் கிறிஸ்துவின் பிரசன்னத்தைத் தொடர்கிறது. மனுக்குலத்தை மீண்டும் இறைவனிடம் கொண்டுவருவதும், அது இழந்த மகத்துவத்தையும் சீர்சிறப்பையும் அதற்கு மீண்டும் அளிப்பதுமே அப்பணி, திருச்சபையானது, மனுக்குலத்தை அதன் பாவம் நிறைந்த, சுயநலமிக்க வழிகளிலிருந்து மனந்திருப்பி, இறையன்பின் விடுவிக்கும் அனுபவத்தை அடையச் செய்வதற்காக ஆர்வத்துடன். தன்னை அர்ப்பணித்து கிறிஸ்துவின் மீட்புப் பணியைத் தொடர்கிறது.

இவ்வேளையில் புனித சின்னப்பர் உரோமருக்கு எழுதிய திருமுகத்திலுள்ள ஒரு வினா நினைவிற்கு வருகிறது. ''தாங்கள் கேள்வியுறாத ஒருவரை எவ்வாறு விசுவசிப்பர்? அறிவிப்பவன் இல்லையெனில் எவ்வாறு கேள்வியுறுவர்?'' (ரோ. 10: 14) இந்த வசனம் திருச்சபையின் மீட்புப்பணி நிறைவேறுவதற்கு நற்செய்திப் பணியாளரின் பங்கு இன்றியமையாததென்பதைக் காட்டுகிறது.

உண்மையிலேயே, உலகில் திருச்சபையின் நற்செய்திப் பணி வெறும் இறையியல் கோட்பாடுகளோ ஆய்வுகளோ மட்டுமல்ல, பலபல தனிநபர்கள், திகதிகள், நிகழ்ச்சிகள், அனுபவங்களை உள்ளடக்கியதும் ஆழமாக வேரூன்றியதுமான வரலாற்று அனுபவமாகும்.

ஆண்டவரின் வல்லமையையே ஆதாரமாகக் கொண்டது.

2. அநேக மறைபோதக அழைத்தல்கள் தோன்றும்படி செய்வதற்கு நாம் பயன்படுத்தக்கூடிய மிகச் சிறந்த கருவி செபமே. ''தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்'' என ஆண்டவர் தாமே கூறியுள்ளார்.

3. எம்மைப் போன்ற ஒரு சமுதாயத்தில் இத்தகைய அழைத்தல்கள் தமது உள்ளார்ந்த மதிப்பை இழந்துவிடுகின்றன என்ற தவறான கருத்தை எமது மனதிலிருந்து அகற்றிவிட வேண்டும். மாறாக உலகில் நாத்திகம் அதிகரித்திருந்தால், அமைப்புகள் பாவம் நிறைந்தவையாய் இருந்தால், மனித வாழ்வே சுயநலத்தின் அடிப்படையில் இயங்குவதினால், இறைவனுக்காகப் பேசுவதற்கோ, சுய அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மனிதரிடம் உளமாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ ஆயத்தமாக உள்ள ஒருவரைக் காண்பது அரிதானால், இன்று மறைபோதகரின் பணி பொருத்தமானதும் முறைப்படியானதுமாகும். இம்மறை போதகர் மனம் பொருந்திய சுய பரித்தியாக வாழ்வினாலும், இறைவனோடு கொண்ட பிணைப்பினாலும் தமது சகோதரர் தம் வாழ்வை மாற்றும்படிக்கு அறைகூவல் விடுக்கின்றார்.

4. வரலாற்றின் இறைவனாகிய ஆண்டவர் மனுக்குலத்தை தன் வழியே செல்ல ஒருபோதும் விட்டுவிடவில்லை மக்களை தம்மிடம் திரும்பி வரும்படி அழைப்பதற்காக அவர் தொடர்ந்து தமது தூதுவர்களை அனுப்பிவந்துள்ளார். இன்றும் அதைச் செய்துவருகின்றார். எதிர்காலத்திலும் அவ்வாறே செய்வார். எனவே எமது பிள்ளைகளுக்கு அத்தகைய அழைப்பு வருமானால், பெருந்தன்மையுடன் அதை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு ஊக்கமும், உதவியும் அளிக்க வேண்டும். உலக நன்மைக்காகவோ, வேறெந்தக்காரணத்துக்காகவோ இறைவனின் வழிகளைத் தடைசெய்ய நாம் முயலக் கூடாது.

5. திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள், துறவிகளைவிட, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது ஞானஸ்நானத்தின் வழியாககிறிஸ்துவின்பணியாளனாக இருந்து, மனுக்குல மீட்பராகிய யேசுவை அறிவித்து அவருக்கு சாட்சிகளாக விளங்க வேண்டும்.

மறைபோதக அர்ப்பணத்திற்கும், நற்செய்தியாளரின் பணிக்கும் திருச்சபை விசேட முக்கியத்துவமளிக்கும் இம் மறைபரப்பு ஞாயிறன்று, கிறிஸ்தவர்களாகிய நம்மெல்லோருக்குமுள்ள மாபெரும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சக்தியையும் வழிநடத்துதலையும் தந்தருளும்படி இறைவனிடம் மன்றாடுவோமாக!

''அப்போஸ்தலரின் இராக்கினியான மரியாயே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.''

பிதா மல்கம் ரஞ்சித்
தேசிய இயக்குநர்

## திருச்சபை வரலாற்றில் மறைபோதகர்

திருச்சபையின் வரலாற்றை நாம் படிக்கும்போது, உயிரும் உடலும் கொண்டு வாழ்ந்த நீண்டதொரு மறை போதகர் வரிசையைக் காண்கிறோம்—தலைசிறந்த மறை போதகரான புனித சின்னப்பர், ஸ்லாவிய மக்களுக்கு நற்செய்தி அறிவித்த புனிதர்களான சிறில், மெதோடியஸ், ஜெர்மானியருக்குப் போதித்தவரான புனித பொணிபஸ், ஐரோப்பாவின் பெரும்பகுதியில் நற்செய்தி அறிவித்தவரான அயர்லாந்தைச் சேர்ந்த புனித பத்திரிசியார், கீழ்த்திசை நாடுகளில் மறைபோதகம் செய்த புனித பிரான்ஸிஸ் சவேரியார், இலங்கையில் விசுவாசம் அழிந்து விடாமற் காத்த எமது சொந்த அப்பாஸ்தலரான ஜோசவ் வாஸ் முனிவர், வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் பல்வேறு நாடுகளில் மறைப்பணி புரிந்த' எமக்குத் தெரிந்த நூற்றுக் கணக்கான வேறு மறைபோதகரும் உள்ளனர். அவர்களது வாழ்வில் வீரத்துவம் 'சுய பரித்தியாகம், பசி, துன்பம், பாடழிவு, மரணம் நிறைந்துள்ளதைக் காண்கிறோம்.

இவர்களைவிட, எமக்குத் தெரியாத எண்ணற்ற மறை போதகர்கள் வரலாற்றின் ஏடுகளிலே மறைந்துவிட்டாலும், அவர்கள் நற்செய்தி அறிவிப்பதற்காக மிகவும் பலனுள்ள விதத்தில் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள். இவர்கள் அனைவரும் தமது ஆண்டவருக்காக இலட்சக் கணக்கான மக்களின் இதயங்களை வென்றெடுத்த அணியின் மௌனமான போர் வீரர்கள்.

ஆனால் மனிதர்களாகிய எம் ஒவ்வொருவரையும் போல் அவர்களும் வலுவற்றவர்கள், பலவீனர், அவர்கள் பலன் கொடுக்கக் கூடியதாயிருந்த தன் இரகசியமென்ன? அவர்களைப் பலன் கொடுக்கச் செய்தது யார்? இவ்வளவு மேலான நிலையை அடைவதற்கு வீரத்தை அளித்தது யார்? மீண்டும் இவ்வினாக்களுக்கு விடை புனித சின்னப்பரின் திருமடல்களிலேயே காணப்படுகிறது. ''நான் நட்டேன், அப்பொல்லோ நீர்பாய்ச்சினார். ஆனால் விளையச் செய்தவர் கடவுள் தாமே'' (1கொரி 3: 6-7).

## புனித சின்னப்பரின் அழைப்பின் அனுபவம்

தனது சொந்த அழைப்பைப்பற்றி புனித சின்னப்பர் தமது நூல்களில் எழுதியுள்ளதை வாசித்தால், அவரது அனுபவம் எத்தகையதாக இருந்தது என்பதில் எள்ளளவும் ஐயமிருக்க முடியாது. புனித சின்னப்பர் தான் ''தாயின் வயிற்றில் இருந்த போதே'' இறைவன் தாமே தன்னை அழைத்து நற்செய்தி அறிவிக்கும்படி வற்புறுத்தியதாக உணர்கிறார். ''அது என் மேல் சுமத்தப்பட்ட கடமையே, நற்செய்தி அறிவிக்காவிடின் ஐயோ! எனக்குக் கேடு'' (1கொரி 9: 16-17) அதனை ஏற்க மறுப்பதற்கு அவரால் இயலவில்லை.

புனித சின்னப்பர் தமது மறைபோதகத்தில் ஏதாவது வெற்றி அடைந்தாரென்றால், அதை அவர் அடைய செய்தது ஆண்டவர்தான், அவரது வெறுமையிலும், பலவீனத்திலும் இது நடைபெறுகிறது. (2கொரி 12: 9) பிற்காலத் திருச்சபையின் வரலாற்றில் காணப்படும் மாபெரும் மறைபோதகர் சிலரது கடிதங்களையோ, சுயசரிதைகளையோ படிக்கும் போதும் இதே அனுபவத்தைத் தான் காண்கிறோம். இறைவனது வல்லமை தம்மை உந்தித் தள்ளி, வீரத்துவம், பிரமாணிக்கம் ஆகியவற்றின் சிகரத்தையே எட்டிப் பிடிக்கும்படி செய்வதே அந்த அனுபவம்.

இவையனைத்தும் தற்காலத்துக்குரிய சில அரிய படிப்பினைகளை எமக்குக் கற்பிக்கின்றன. அவற்றைச் சுருக்கமாக உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்,

1. மேற்கு நாடுகளிலோ வேறெங்கோ குருத்துவ, துறவற, மறைபோதக அழைத்தல்கள் அருகிவருவதைக் காட்டும் புள்ளி விபர ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு அழிவுக் கால தீர்க்க தரிசனங்களைக் கூறுவது, தாம் விரும்பிய நேரத்திலும், விரும்பிய விதத்திலும் தமக்கு ஊழியர்களை அழைத்து அவர்களுக்கு ஆற்றலை அளிக்கும் ஆண்டவரில் முற்றாக நம்பிக்கையிழந்து விட்டதைத் தான் காட்டுகிறது, குருத்துவ, துறவற, மறைபோதக வாழ்வுக்குரிய அழைத்தல்கள் இயந்திர, தொழில் நுட்ப ஆற்றலை ஆதாரமாகக் கொண்டவையல்ல. தாம் விரும்பியவர்களை அழைத்து, உலகின் கடைகோடிவரைக்கும் செல்லும்படி அவர்களை உந்தித் தள்ளக்கூடிய



## வாசகர் கருத்து



எம் விசுவாசத்தின் 'காவலனே' வாரா வாரம் உன் வரவால் குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற்று வருகிறோம் என்பதை மானசீகமாக உணருகிறோம். உனது வளர்ச்சியோடு கூடவே வாசகர்கள், எழுத்தாளர்கள் அனைவரும் வளர்ந்து வருகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 'கண்மணிகளின் காவலனே' நாளுக்கு நாள் அங்கத்தவர் தொகையும், கௌரவ அங்கத்தவர் தொகையும், அதிகரித்து வருவதை நீ அறிவாய். எனவே இந்தப் பகுதிக்கான இடத்தை சிறிது விஸ்தரித்துக் கொடுத்தால் என்ன? இதற்காகப் பத்திரிகையின் விலை உயர்ந்தாலும் பரவாயில்லை.

திருமதி. N. A. யேசுதாசன்,
,, J. P. தேவதாசன்,
யாழ்ப்பாணம்.
,, M. P. அருமைநாயகம்
ஒட்டகப்புலம்.

★ ★ ★

8. 9. 89 காவலனின் ஆயர் மன்றத்தின் அறிக்கையைப் படித்தேன். ஞாயிறு திருப்பலியின் போதும் இவ்வறிக்கையை வாசிக்கக் கேட்டேன். 83 இலிருந்து வன்முறையினால் உடன் பிறப்புகளை இழந்து கொண்டிருக்கின்றோம். 84 மார்கழி 4-ல் கட்டுக்கரையின் நீர்மட்டம் எங்கள் கண்ணீரால் உயர்ந்தது. அருவி ஆறு செந்நீராய்ப் பாய்ந்தது. அந்தக் கொடிய நாளில், அநாதரவான எம்மவர் சடலங்களை எடுத்து அடக்கம் செய்ய உதவிய காரணத்தால் எங்கள் சகோதரன் பஸ்ரியனின் சடலத்தைக் கூட எம்மால் காண முடியவில்லை.

''ஆழ்ந்த அனுதாபங்கள்'' இன்றைக்குத்தான் உணர்வு பூர்வமாக எமக்கு தெரிவிக்கப்படுகிறது. கட்டுக்கரையின் துயர வெள்ளத்தைக் கண்டும் காணாமல் இருந்தவர்களின் மனச்சாட்சியை களனி கங்கை ஒரு உலுப்பு உலுப்பிவிட்டிருப்பதை உணர முடிகிறது. சமாதானத்தை நாடும் அனைத்து மக்கள் சார்பாகவும் ஆயர் மன்றத்திற்கு நன்றி சொல்வோம். நமது நாட்டின் சகல மக்களுக்கும் சமாதானத்தை ஆசிப்போம்.

ஜெயாபாலாஜி
முருங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

## சிறிய இறைவாக்கினர்-36

**சக்கரியாஸ்-4.**

இறைவாக்கினர் சக்கரியாஸ் ஆகமத்தில் 9-ம் அதிகாரம் முதல் 14 ம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளில் காணப்படும் முக்கிய கருத்துகளைக் காண்போம்.

இப்பகுதியில், வரவிருக்கும் மெசியா தாழ்ச்சியுள்ளவராக இருப்பார் என்றும், நாடுகளின்மேல் அமைதியான ஆட்சி செய்வார் என்பதும் முன்னுரைக்கப்படுகின்றது. கிரேக்க மன்னன் அலெக்சாந்தர் அடைந்த வெற்றிகள் மெசியா அரசரின் வருகையையும், வெற்றியையும் முன் குறிப்பதாக எண்ணப்படுகிறது. மெசியா அரசர் வெற்றியோடு யெருசலேமில் நுழைவார். ஆனல் ஏனைய அரசர்கள் போல் அல்லாது மெசியா எளிமையானவராக இருப்பார். நீதி, அமைதி என்பவற்றைக் குறிக்கும் அடையாளமாக கழுதையின்மேல் அமர்ந்து விடுவார். இதயத்தில் சாந்தமும், தாழ்ச்சியும் உள்ளவராக இருப்பார். தாவீதின் பழம்பெரும் அரசை மீண்டும் அமைப்பார். எல்லா நாடுகளிலும் அமைதியை அறிவித்து அதைப்பாதுகாப்பார் என்று மெசியா பற்றிக் கூறப்படுகின்றது.

மெசியாவின் வருகையால் இஸ்ராயேலர்களுக்கு எதிராகக் காலாகாலமாக செயற்பட்டு வந்த நாடுகளும் இறைவனுக்குச் சொந்தமாக்கப்படும். அந்நாட்டவர்களும் மனந்திரும்பி யூதாவோடு இணைக்கப்படுவார்கள் என்பதை இறைவாக்கினர் எதிர் நோக்குகின்றார். இறையரசு வருகைபற்றிய விசுவாசம் இங்கு காணப்படுகின்றது.

ஆண்டவருக்குப் பிரமாணிக்கமாக இருக்கவேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகின்றது. மக்கள் தங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ளப் பிறதெய்வங்களையும் குறிசொல்பவர்களையும் நாடினர்கள். இதை இறைவாக்கினர் கண்டிக்கிறார். உங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ள ஆண்டவரிடம் கேளுங்கள், அவரே அவற்றை உங்களுக்குத் தரவல்லபராக இருக்கிறார் எனக்கூறி ஆண்டவரில் நம்பிக்கை கொள்ள அழைக்கிறார்.

மேலும் இஸ்ராயேலர்களிடையில் இடம் பெற்றுவந்த இறைவாக்குப்பணி முற்றுப் பெறப்போவதையும் சக்கரியாஸ் படம் பிடித்துக்காட்டுகிறார். இனி ஆண்டவர்தாமே மக்களை வழிநடத்துவார் எனக்கூறி ஆண்டவரின் வழிநடத்தலை நினைவூட்டுகிறார்.

—கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 92

## எண்ணாகமம் முடிவுரை

எண்ணாகமம் சீனாய் மலையிலிருந்து கானான் நாட்டைச் சேரும்வரை இடையிட்ட காலத்தில் நடந்தவற்றை எண்ணிக்கையோடு கூறுகிறது. இஸ்ராயேலர் தங்களது வரலாற்றை இங்கே எழுதவில்லை. அவர்களுக்கு அதில் அக்கறையுமில்லை. இயற்கை கடந்த ஒரு நோக்கத்திற்காக எழுதப்பட்டது. அவர்களது வாழ்வில் செயல்மிக்க இறைவனின் செயல்பாடுகளை வெளிப்படுத்துவது இதன் நோக்கம். இஸ்ராயேலருக்கு அவர்களது தோற்றம், வளர்ச்சி, விடுதலை ஒரு சாதாரண இயற்கையான நிகழ்ச்சியன்று. அது தகுதியில்லாத தனக்கு இறைவன் தந்த அன்புக்கொடை.

இங்கு வரலாற்றுப் பின்னணியில் அதன் அடிப்படையில் இறை செயல்பாடுகளை ஆசிரியர் வரைந்துள்ளார். எனவே ஆசிரியர் வரலாற்றைப் புறக்கணிக்க முடியாது. வரலாறு தொல் பொருள் பற்றிய ஆய்வுகள் எண்ணாகமத்தில் காணப்படும். இஸ்ராயேலின் பாரம்பரிய வரலாற்றுக்கு சான்று கூறுகின்றன.

எண்ணாகமம் இறைவனின் சினத்தையும், சீற்றத்தையும் வெளிப்படுத்துகிறது. (எண். 11 முதல்— 25 அதிகாரம் மட்டும் உள்ள பகுதியில் அடிக்கடி காணப்படும் சொல் "இறைவன் சினம்கொண்டார்" என்பது எகிப்திலிருந்து விடுதலையான மக்கள் செங்கடலைக்கடந்து பாலைவழி சென்றனர். இவர்களில் இரண்டு பேர் மட்டுமே கானான் நாட்டை அடைந்தனர். மற்றவர் விசுவாசமின்மையாலும், கீழ்படியாமையாலும் இறைவனுக்கு எதிராக முணுமுணுத்தனர். அவரைச் சோதித்தனர்.

எண்ணாகமத்தில் முறையிடுதல், இச்சை, அகந்தை, விசுவாசமின்மை, ஓய்வுநாளை மீறுதல், கலகம், கட்சிப்பிளவு, நம்பிக்கையின்மை, தகாத உறவு, ஆகிய முறையில் இறைவனை மக்கள் சோதித்தனர், சினமூட்டினர், அதனால் பாலையில் இறந்து போனார்கள். நிலைத்துநின்றவர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை அடைந்தனர்.

உலகமாகிய பாலையில் வழிநடக்கும் எமக்கும் எண்ணாகமம். எச்சரிக்கின்றது, சீர்ப்படுத்தி பிரமாணிக்கமாயிருக்க கூறுகின்றது. இறுதிவரை நிலைத்து நின்றால் மீட்புப்பெறுவோம்.

இ. ம. ஜெயசீலன்.

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக நேயர்களே!

"மனிதனுடைய அறியாமை அவனைத் தடுமாறச் செய்கிறது. அவன் கடவுளுக்கு விரோதமாயும் வெறுப்புக்குரியவனாகவும் இருக்கிறான்." என்று 19/3 இல் திருநூல் கூறுவது எவ்வளவு அடக்கமான வார்த்தை. அறியாமையினாலும், அவசரப் புத்தியினாலும் இன்று நாம் நிலைதடுமாறிக் கொண்டிருப்பதை நீங்கள் கண்ணால் காண்கின்றீர்கள். தானே! இவர்கள் மனிதருக்கு மட்டுமன்றி இறைவனுக்கும் அருவருப்பு கொள்ளக் கூடியவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களைப் பார்த்து காறி உமிழ்கின்றார் நம் முன்னோர்!

"அறிவில்லார்க்கு உரைப்பவர்- அவரிலும் மூடர்" என்று!

நாம் அன்றாடம் புத்தி சொல்லியும், திருந்தாதவர்களை என்னவென்று சொல்வது? விட்டுத் தள்ளுங்கள்!

இன்னொன்றையும் கேளுங்களேன்!

"நம்மிடம் பணம் இருக்குமட்டும் நமக்கு ஊரும், உறவும், சுற்றமும் கூடுவது இயல்புதானே. ஆனால் செல்வம் நம்மை விட்டு "செல்வோம்" என்று விடைபெற்றுவிட்டால் இவையனைத்தும் விட்டுப்போய்விடும். இதுதான் மனிதவாழ்வு. இதையே முதுமொழியாளர்.

"செத்த மாட்டில் உண்ணி கழன்றதுபோல"... என்றார். ஆழமாக யோசியுங்களேன். அர்த்தம் தெளிவாகும்.

திருநூல் ஆசிரியரும் 19/4-ல் மனமுடைந்து கூறுகிறார்.

"செல்வம் மிகுதியான நண்பர்களைச் சேர்க்கும். ஏழையின் சுற்றத்தாரோ அவனை விட்டுப் பிரிந்து போகிறார்கள்."

செல்வத்திலும், வறுமையிலும் உங்களை நேசிக்கின்றவர்களை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

### வாரம் ஒருசிந்தனை

"சில மனிதர்கள் மற்றவர்களின் வாழ்க்கையை எரித்து, சாம்பலை பூசித்திரிந்து பக்தர்கள் போல் வேடம் போடுகிறார்கள்.

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.

### முன்னேற்றப் பாதைக்கு ...

உன்னையே, நீ குறைத்து மதிப்பிடாதே, உன்னில் எத்தனையோ அரிய சிறந்த ஆற்றல்களுள்ளன. கடந்த காலத்தோல்விகளைக் கணக்கிட்டுப் பார்த்துத் துவண்டு போய்விடாதே. எதையும் செய்யும் ஆற்றல் எனக்குண்டு என்று புதிய வேகம் கொண்டெழு.

கழிவிரக்கத்தால், தன்னிரக்கத்தால், சுயசோகத்தால், சோர்ந்து போகாதே. என்னென்ன ஆற்றல் உன்னிடம் உள்ளன என்பதைக் கணக்கிட்டுப்பார். ஒவ்வொருவரிடமும் வல்லமை நிறைந்த அருட்கொடைகள் நிச்சயமாக உள்ளன. அது என்ன என்பதைத் தேடிப்பிடிப்பதுதான் உன் சாமர்த்தியம். A. A. C.

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 3<br>சுடர்: 36 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

### அம்மாவின் செபமாலை

பிரான்ஸ் நாட்டில் குழப்பம் நடந்த வேளை, கத்தோலிக்க மதத்தை அழிக்க அதிகாரம் மிக்கோர், வீடு வீடாகச் சென்று கத்தோலிக்க மக்களைத் துன்புறுத்தினர். அடக்கு முறையில் நம்பிக்கை கொண்ட ஒருவன் ஓர் இல்லம் சென்று, அங்கிருந்த பிள்ளைகளையும் தாயையும் துன்புறுத்த முனைந்தான்.

பிள்ளைகளோ ! பயத்தால் நடுங்கிய வண்ணம் 'அம்மா' என்றவாறு அம்மாவை அணைத்துக் கொண்டு நின்றனர். உள்ளே வந்தவனோ ! தாயை நெருங்கி "உன் செபமாலையைக் கொடு" என்று ஆவேசத்துடன் கத்தினான்.

தாயோ ! தன் பிள்ளைகளை அணைத்திருந்த இரு கரத்தையும் நீட்டி "இதோ எனது செபமாலை. இவற்றைப் பயன்படுத்தி ஒவ்வொருநாளும் நான் செபமாலை செபிக்கிறேன். உனக்குப் பிரியமானால் இவ்விரல்களைக் கொண்டு போ," என்றாள். அன்புக் கண்மணிகளே! அம்மாவின் செபமாலையைப் பார்த்தீர்களா ? எவ்வேளையும் செபிக்கத்தக்க செபமாலை. செபமாலை இல்லையென்று, செபிக்கத்தவறும் கண்மணிகளே அம்மாவின் செபமாலைவழி நீங்களும் செபிக்கலாம் தானே!

அன்பின் அன்புவிழி.

### திருக்குறளும் விவிலியமும் போட்டி—3

சரியான விடைகள்: 1) அகரமும் 2) அறிவிலி 3) களைத்தவனுக்கு 4) அனைத்தையும் 5) ஞானத்தின் 6) தீமைகள் 7) மனிதனை 8) புணை 9) தீர்ப்பிடாதீர்கள்.

சரியான விடைகள் எழுதியவர்கள்:

(1) S. M. யோண்சன் அ. எ. 1 (2) ஜே. மெ. தீபா சொய்சா அ. எ. 16 (3) ஜே. தீபன் சோசை அ. எ. 17 (4) அ. ப. எழில் அமலன் அ. எ. 20 (5) யே. றெஜினோல்ட் அ. எ. 43 (6) ஞா. மேரி மாலதி அ. எ. 48 (7) ஞா. ரெட்ணராஜ் அ. எ. 63 (8) அ. ஷாலின் பிரான்சிஸ் அ. எ. 44 (9) றா. இராசநாயகம் அ. எ. 133 (10) ஜே. கீதாஞ்சலி சோசை அ. எ. 150 (11) யே. இம்மானுவேல் அ. எ. 91 (12) அ. றெபின் அ. எ. 187 (13) லூ. அருந்ததி அ. எ 197 (14) சி. லூயிஸ்நாயகம் அ. எ. 203 (15) யே. மரியா அருளரசி 16) ந. யுஸ்ரின் பீரிஸ்

★ பரிசுபெறும் கண்மணி:

ஞா. மேரி மாலதி 10-ம் வட்டாரம், புங்குடுதீவு.

போட்டியில் பங்குபற்றிய கண்மணிகளுக்கு அன்பு விழியின் அன்புப் பாராட்டுக்கள் உரித்தாகுக.

போட்டி 4 விரைவில் வரும்.

### குற்றச் செயல்கள் பெருகிச் செல்ல காரணங்கள்

இரு கண்மணிகள் மட்டும் இதற்குப் பதில் அளித்துள்ளார்கள்.

(1) ம. கிறிஸ்ரி மோகன் ராஜ் அ. எண். 28.

கூறும் காரணங்கள்:

(i) அன்பின் ஆழத்தை ஒவ்வொருவரும் அறியாமை.
(ii) கற்ற கல்வியை வாழ்க்கையில் கடைப்பிடிக்காமை.
(iii) கல்வி வேறு வாழ்க்கை வேறு என்ற தப்பான எண்ணம்.
(lv) சமயங்கள் போதிக்கும் உண்மையை உணராமை.
(v) 'நான்' என்ற அகந்தை கொண்ட மனம்.

(2) ம. மேரி எட்வேட் செல்வநாயகம் அங். எண். 184 கூறுகிறார்.

(i) பெற்றோரின் வளர்ப்பில் உள்ள தவறுகள், விசேடமாகத் தாயின் தவறுகள்.
(ii) தாய் தன் பிள்ளை சிறுவயதில் குற்றம் செய்யும்போது தண்டித்து வளர்க்காமை.

* * *

காவலன் கண்மணிகளே ! எதிர்காலம் வளம்பெற வேண்டும் என்று துடித்து நிற்கும் கண்மணிகளே உங்கள் பதில்களையும் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தையின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பணிக்கு முதற் தேவைப்படுவது அப்பணியைச் செய்யும் ஆட்களே, இவ்விடத்தில் கிறிஸ்தவ குடும்பம் தொடக்கம் ஒவ்வொருவரும் மறைபோதகத்துக்காக குருத்துவ துறவற அழைத்தல்களும் பொதுநிலையினர் நடுவில் அழைத்தல்களும் தோன்றி வளர துணைபுரிய வேண்டிய பொறுப்பு தமக்குண்டு என்பதை உணரவேண்டும். எந்தப் பொருத்தமான வழிவகைளையும் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனல் "அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு ஆதலால் தம் அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை மன்றாடுங்கள்" (மத். 9:37-38) என்ற யேசுநாதரின் வார்த்தையின்படி மேலான வழிவகையான செபத்தை அலட்சியம் செய்யலாகாது.

பொது நிலையினரின் அழைப்பும் பணியும் என்ற திருமடலில் நான் குறிப்பிட்டபடி, இன்றைய நிலையில் நற்செய்தியை அறிவிக்கும் கடமைக்கு தாம் தனிப்பட அழைக்கப்பட்டதாக கிறிஸ்துவின் சீடர் ஒவ்வொருவரும் உணர்வது அவசியமாகிறது. "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக்கேடு" (1கொரி 9:16) முதற் திருவருட்சாதனங்களைப் பெறுவதன் மூலமும், பரிசுத்த ஆவியின் கொடைகளினுலும் பொதுநிலைக் கிறிஸ்தவர் இப்பணிக்கு ஆயத்தம் செய்யப்படுகிறுர்.

திருச்சபையின் அனைத்துலகப் பணியில் பொது நிலையினர் பங்கு கொள்வதை நோக்கும் போது நான்கு மறைபோதக சபைகளில் இரண்டு அதாவது விசுவாசப்பரப்புதல் சபையும், அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையும் பொது நிலையினரால், குறிப்பாக இறையரசில் பேரார்வம் கொண்ட பெண்களால் நிறுவப்பட்டன என்பது மகிழ்ச்சிக்கும், நம்பிக்கைக்கும் ஏதுவான ஒன்றல்லவா?

## ஏனைய மறைபோதக சபைகள்

மறைபோதக சபைகளை உருவாக்கி, உயிரூட்டி வரும் நிரந்தரமான பணி

சபை நிறுவப்பட்டதன் நூற்றூண்டு நிறைவுகாரணமாக, அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையினதும் செயற்பாடு பற்றி நான் கூறியுள்ளபோதிலும், ஏனைய மறை போதக சபைகளாகிய விசுவாசப் பரப்புதல் சபை, திருப்பாலத்துவ சபை, குருக்கள் துறவியரின் மறைபோதக ஒன்றியம் ஆகியவற்றின் பணியையும் பாராட்டாமல் நான் இச்செய்தியை நிறைவுசெய்ய முடியாது, இவை திருத்தந்தைக்கும் தனித்திருச்சபைக்கும் பணி புரியக்காத்திருக்கின்றன.

ஒவ்வொரு சபையும் தனக்கேயுரிய சிறப்பான செயற்பாட்டை கொண்டிருப்பினும் அவற்றிற்கு அடிப்படையான பொதுநோக்கம் ஒன்று உண்டு. அதாவது குருக்களும் பொது நிலையினருமான இறைமக்கள் அனைவரிடத்தும் ஓர் அழகான மறைபோதக உணர்வை ஏற்படுத்தி அது அணைந்து போகாகாமல் காப்பதாகும். இந்த உணர்வானது மறைபோதக அழைத்தல்களை ஊக்குவிப்பதற்கும், சகல கிறிஸ்தவர்களினதும் தாராள பங்களிப்பைக் கொண்டு, அதிகரித்து வரும் தேவைகளுக்கேற்ப உலகின் மறைபோதக நாடுகளுக்குத் துணைபுரிவதற்கும் தம்மை அர்ப்பணிக்கும்படி செய்கிறது.

அனைத்துலக அன்பின் தினமாகிய இன்று திருத்தந்தை உலகின் ஏழைஎளியவர்கள் சார்பாகவும், தமது மறைச் சகோதரர்களும், நல்லெண்ணமுடைய சகல மக்களும் நேசக் கரம் நீட்டும் மறைபோதகர் சார்பாகவும் பேசுகிறவராக இருக்கிறுர்.

மறை போதகர்கள் தூர இடங்களிலுள்ள மறைபரப் புத்தலங்களில் நற்செய்தியை அறிவிக்கப் பாடுபடுகிறுர்கள், இன்று இப்பணியாளர் கஷ்டங்களையும், சோதனைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. பல சமயங்களில் உன்னத சாட்சியமாகிய உயிர்த்தியாகத்தையும் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, முழுத் திருச்சபையின் சார்பாகவும் எனது அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்கள் தமது மறைப்பணியில் உயிர்த்த வரின் பிரசன்னமும், தூய ஆவியின் வல்லமையும், விசுவாசிகள் கூட்டத்தின் ஒருமைப்பாடும் தமக்குத் துணைநின்று தாங்கி வருவதாக அவர்கள் உணர்வார்களாக!

மறைபோதகப் பணியில், அப்போஸ்தலரின் இராக்கினியும், சகல மக்களின் அன்னையுமாக விளங்கும் பரிசுத்த மரியம்மாள் தமது முன்மாதிரியாகவும், ஆதாரமாகவும் இருக்கிறுள் என்பதை ஆண்டவரின் சீடர் அனைவரும் உணர்வார்களாக! திருச்சபையின் மறைபோதக அலுவல் அனைத்தையும், இறையரசை அறிவித்து திருச்சபையை உலகின் இதயத்தில் வேரூன்றும்படிக்கு தமது வாழ்வை அதற்கென அர்ப்பணித்தவர்களையும் தேவ தாயிடம் ஒப்படைக்கிறேன்.

மறைபோதகருக்கும், அவர்களது உடனுழைப்பாளர்களுக்கும், திருச்சபையின் மறைபோதகப் பணியில் பங்குபற்றும் அனைவருக்கும், இறைவனின் தயவுக்கு ஓர் அறிகுறியாகவும், எனது அன்புக்கும், நன்றிக்கும் ஓர் அடையாளமாகவும் எனது அப்போஸ்தல ஆசியை வழங்குகின்றேன்.

1989 மே 14 பெந்தெகோஸ்தே திருநாளன்று எனது ஆட்சியின் 11வது ஆண்டில் அளிக்கப்பட்டது.

பாப்பு IIம் அருள் சின்னப்பர்.

## கட்டுரைப்போட்டி பற்றிய அறிவித்தல்

### 10,000/- பெறுமதியான பணப்பரிசில்கள் வெற்றி-பெறுபவர்க்காகக் காத்திருக்கின்றது.

சுதேச அழைத்தல்களுக்கான புனித இராயப்பர் சபையின் நூற்றூண்டு நிறைவின் நினைவாக "இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் சுதேசமயமாக்கல்: நேற்று, இன்று, நாளை" என்ற பொதுக் கருப்பொருளைத் தலையங்கமாகக் கொண்ட கட்டுரைப் போட்டி ஒன்று சிறுவர், இளைஞர், வளர்ந்தோர்க்கென இலங்கை மறைபரப்பு சபையின் தேசிய அலுவலகத்தினுல் நடாத்தப்படவுள்ளது. பரிசுபெறும் கட்டுரைகள் தகுதிவாய்ந்த ஒரு குழுவினுல் தெரிந்தெடுக்கப்படும். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பங்குபற்றும் மூன்று வயசுப் பிரிவினர்க்கும் 10,000/- பெறுமதியான மொத்தப் பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சுதேச குருக்கள் துறவிகளை உருவாக்குவதன் மூலம், படிப்படியாக தலத்திருச்சபையை சுதேசமயமாக்கலில், ஜின் பிக்காட் என்ற பெண்மணியால் ஸ்தாபிக்கப்பட்ட, சுதேச அழைத்தல்களுக்கான புனித இராயப்பரின் சபை என்ன பங்கை வழங்கியது என்பதைக் கவனத்தில் எடுத்து அது ஒரு விசேஷ அம்சமாக உமது கட்டுரையில் இருக்க கவனிக்கவும்.

ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது கட்டுரைகளை சிறப்பாக எழுதுவதற்கு, உதவியாக சில தலையங்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதில் நீர் விரும்பிய ஏதாவது ஒன்றைத் தெரிந்தும் எழுதலாம். அன்றேல் எல்லாவற்றையும் தொடுத்து ஒரு கட்டுரையாகவும் எழுதலாம்.

இதில் பங்குபற்றுபவர் ஒரு கட்டுரையோ, அன்றேல் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளோ எழுதலாம். பாடசாலைப் பிள்ளைகளாயின் கட்டுரை, அனுப்புபவரின் ஆக்கம்தானு என்பதை அந்தப் பாடசாலை அதிபர், அன்றேல் வகுப்பாசிரியர் ஆராய்ந்து உறுதிப்படுத்தி அனுப்ப வேண்டும். ஏனையோருக்கு கட்டுரையுடன் உறுதிப்படுத்தப்பட்ட பங்குத்தந்தை போன்றேரின் கடிதம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கட்டுரைகள் அனுப்ப வேண்டிய விலாசம்:

"நூற்றூண்டு விழாக் கட்டுரைப் போட்டி"<br>
தேசிய இயக்குனர்,<br>
மறை பரப்புச் சபை.<br>
இல. 19, பல்கம் பிளேஸ்,<br>
கொழும்பு—8.

சகல கட்டுரைகளும் 1989-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கும்படி மேற்கூறிய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

சிறுவர்கள்:

கட்டுரைத் தலைப்புக்கள்:

* இலங்கையில் நாங்களும் கிறிஸ்துவின் மறைத்தூதுவர்களாக வேண்டும்.
* கிறிஸ்தவனுக இருப்பது நான் ஒரு இலங்கைப் பிரசையாக இருப்பதற்குத் தடையல்ல.
* இலங்கையின் விசுவாசத்தைப் பாதுகாத்த ஆசிய மறைத்தூதுவர்— வண. யோசவ்வாஸ் முனிவர்.

கட்டுரைகள் அனைத்தும் 750 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

பரிசுகள்:

முதலாம் பரிசு: 1,000/-<br>
இரண்டாம் பரிசு: 750/-<br>
மூன்றும் பரிசு: 500/-

இளைஞர்கள்;

கட்டுரைத் தலைப்புக்கள்:

* கிறிஸ்தவமும், இலங்கையில் அதை சுதேச மயமாக்கலின் அவசியமும்.
* ஏன் எமக்கு சுதேச குருக்கள் இலங்கையில் தேவை ?
* கிறிஸ்துவின் விசுவாச ஒளியை, மறைந்த விதமாக இருந்து ஏற்றி வைத்த மறைத் தூதுவரான ஜீன் பிகாட்.
* கிறிஸ்தவனுக இருப்பது, நான் ஒரு இலங்கைப் பிரசையாக இருப்பதற்குத் தடையல்ல.

இக்கட்டுரைகள் 1200 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

பரிசுகள்:

முதலாம் பரிசு: 1500/-<br>
இரண்டாம் பரிசு: 1000/-<br>
மூன்றும் பரிசு: 750/-

வளர்ந்தோர்:

கட்டுரைத் தலைப்புக்கள்:

* உண்மையான இலங்கைத் திருச்சபையை நோக்கி.
* இலங்கையில் சங்கீதம், இலக்கியக்கலைகள், நாடகம், சித்திரம் ஆகியவற்றிற்கு கிறிஸ்தவப் பங்களிப்பு.
* கிறிஸ்தவனுக இருப்பது, நான் ஒரு இலங்கைப் பிரசையாக இருப்பதற்குத் தடையல்ல.
* இலங்கைத்தீவின் புத்திரர்களும், புத்திரிகளும், அதன் மக்களுக்கு கிறிஸ்துவின் மறைத்தூதுவர்களாக இருத்தல்.

இக்கட்டுரைகள் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

பரிசுகள்:

முதலாம் பரிசு: 2000/-<br>
இரண்டாம் பரிசு: 1500/-<br>
மூன்றும் பரிசு: 1000/-

தேசிய அலுவலகத்தினுல் நியமிக்கப்படும் நடுவர் குழுவின் தீர்வே இறுதித் தீர்வாக இருக்கும்.

வேறு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

"நூற்றூண்டு விழாக் கட்டுரைப் போட்டி"<br>
தேசிய இயக்குனர்<br>
மறைபரப்புச் சபை,<br>
இல. 19, பல்கம் பிளேஸ்<br>
கொழும்பு—8.

## திருச்செபமாலை பற்றி திருத்தந்தையரின் கூற்று

செபமாலை அன்னையின் சிறப்புமிக்க மாதமாம் இந்த ஐப்பசி மாதத்திலே திருச்செபமாலையின் உன்னதமான தேவை பற்றியும் அதன் மகத்துவத்தைப் பற்றியும் அறிவதும் நமது நாளாந்த வாழ்விலோ தனியாகவோ, குடும்பமாகவோ, குழுவாகவோ, செபமாலை செபிப்பதும் நம் கத்தோலிக்க ஞான வாழ்வில் கட்டாய தேவையாக அமைகிறது.

இதன் தேவை பற்றித் திருமறையின் திருத்தந்தையர் திரும்பத் திரும்ப கூறிய கூற்றுக்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

1. அருட்சாதனங்களின் உறைவிடம் திருச் செபமாலை.
(5 ஆம் சின்னப்பர்)

2. இறைவனின் கோபத்தைத் தணிக்க ஒரு கருவியாக அமைவது திருச் செபமாலை.
(13 ஆம் கிறகோரியார்)

3. பாவத்தை அழித்து இறையருளை மீட்டுத் தரும் இணையில்லாச் சாதனம் திருச் செபமாலை.
(14 ஆம் கிறகோரியார்)

4. தவறுகளுக்கும், தீமைகளுக்கும் உன்னத நிவாரணம் திருச் செபமாலை.
(13 ஆம் பெனடிக்ற்)

5. தனியாகவோ, கூட்டாகவோ. இல்லத்திலோ, ஆலயத்திலோ செபமாலைப் பக்தியிலே முழுமனதுடன் தளராது ஈடுபட கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் கனிவுடன் அறைகூவுகிறேன்.
(13 ஆம் லியோ)

6. அன்னைமரியாளின் இதயத்தை மகிழ்விப்பதும் அருட்செல்வங்களில் சிறப்பு வாய்ந்ததும் அழகுருவானதுமான இனிய மன்றாட்டே திருச் செபமாலை ஆகும்.
(10 ஆம் பத்திநாதர்)

7. இறை உண்மைகள் வழியாக ஆன்மாக்களுக்கு எழுச்சி ஊட்டுவதும் நித்திய பேரின்பத்தின் கதவுகளைத் திறந்து வைப்பதுமான கருவியே திருச் செபமாலையாகும்.
(11 ஆம் பத்திநாதர்)

8. பெற்றூர், உற்றூர், உறவினர், மரித்தோர், வாழ்வோர் அனைவரையும் கன்னி

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

### எழுத்தாளர்களே !

கிறிஸ்மஸ் சிறப்பிதழுக்கான உங்கள் ஆக்கங்களை 15-11-89 க்கு முன் "பாதுகாவலன்" அ. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "துறவற முதல் வார்த்தைப்பாடு" கொடுத்த இருவர்

குருநாகல் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவரும், மகா கல்கமுவை பிறப்பிடமாகக் கொண்டவருமான பெஞ்சமின் எசேக்கியல் நியுட்டன் அவர்கள் ஐப்பசி மாதம் 4 ம் திகதி புதன்கிழமை காலை 8-00 மணிக்கு புனித பிரான்சிஸ் அசீசியார் திருநாளன்று, இறைவனுக்கு அவரை அர்ப்பணித்ததின் மூலம் அவரது முதல் வார்த்தைப்பாட்டைக்கொடுத்தார்.

இவர் ராஜ வம்சத்தைச் சேர்ந்த பஸ்டியன் பெஞ்சமின், அன்னம்மாள் ஆகியோரின் புத்திரராவார். அவர் ஆரம்ப கல்வியை குருநாகல் மாவட்டத்தில் உள்ள மகா கல்கமுவ றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்ற பின், மாத்தளை, மண்தண்டாவளை இந்து மகா வித்தியாலயத்தில் அவரது கல்வியை முடித்துக் கொண்டார்.

அதன் பின் 1984 இல் புனித பிரான்சிஸ் அசீசியார் சகோதரர் சபையில் விண்ணப்பக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர், 1987 இல் நவசந்நியாச பயிற்சிகளை ஆரம்பித்து 1989 ஐப்பசி 4 ம் திகதியுடன் பூர்த்தி செய்து கொண்டார்.

* * *

நீர்கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட ஜோசப் கிறிஸ்டோப்பர் அவர்கள் ஐப்பசி மாதம் 4-ம் திகதி புதன் காலை 8 00 மணிக்கு புனித பிரான்சிஸ் அசீசியார் சகோதரர் இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்ட புனித பிரான்சிஸ் அசீசியார் திருநாளன்று, இறைவனுக்கு அவரை அர்ப்பணித்ததின் மூலம் அவரது முதல் வார்த்தைப்பாட்டைக் கொடுத்தார்.

இவர் ஜோசப் சில்வா, இன்னசியா பர்னாந்து ஆகியோரின் புத்திரராவார். ஆரம்ப கல்வியை களுத்துரை மாவட்டத்தில் உள்ள புனித டொன் பொஸ்கோ மகா வித்தியாலயத்தில் கற்ற பின்பு, மாத்தளை மண்தண்டாவளை இந்து மகா வித்தியாலயத்தில் அவரது கல்வியை முடித்துக்கொண்டார்.

அதன் பின் 1984 இல் மாத்தளை புனித பிரான்சிஸ் அசீசியார் சகோதரர் சபையில் விண்ணப்பக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர், 1987 தொடங்கி 1989 ஐப்பசி 4-ம் திகதியுடன் நவசந்நியாச பயிற்சிகளை பூர்த்தி செய்து கொண்டார்.

சகோ. ம. கிறேஷன் C.M.S.F
நவசந்நியாச இயக்குனர்.
மாத்தளை.




**புனித கலிஸ்டஸ்-அக்டோபர்-14**

சிறு வயதிலே இவர் அடிமையாக வாழ்ந்து பின்னர் தியாக்கோனாகவும், உரோமையிலிருந்த கல்லறைகளின் காப்காளனாகவும் பணிபுரிந்தார். பாப்பு செப்ரீனஸ் மறைந்த பின் இவர் திருத்தந்தையானார். புனித ஹிப்போலிற்றுஸ் இவர் திருச்சபையை பராமரிப்பதில் கண்டிப்பில்லாது நடந்து கொண்டார் என்று குற்றம் சாட்டினார். (உ+ ) பெரிய பாவிகளையும் சொற்பப் பரிகாரத்துடன் சேர்த்துக் கொண்டார் என்றார். பின்னர் இவர் உரோமையில் எழுந்த கலகம் ஒன்றில் கொல்லப்பட்டு இவ்வாறு வேதசாட்சியானார்.

**புனித அலகோக் மார்க்கரீத் மரியம்மாள அக்டோபர் 16**

இவள் இளமையிலே உடல் நலம் குன்றியவளாக பல இன்னல் இடைஞ்சல்களுக்கு இலக்காகினாள். பின்னர் 24வது வயதில் "மினவின" சபையில் சேர்ந்தாள். அன்று முதல் திவ்விய நற்கருணை நாதரைச் சந்திப்பதில் தனி ஆர்வம் காட்டினாள். எல்லா ஓய்வுநேரங்களும் ஆலயத்தினுள்ளே இருப்பாள். ஒரு நாள் இவள் ஜெபிக்கையில் இயேசு தனது திரு இருதயத்தைக் காட்டி "இதோ பார், மனிதர்களை அணைகடந்த விதமாக நேசித்த இதயம்" என்று மீண்டும் மீண்டும் கூறினார். பின்னர் இவள் தனக்கு கூறியதை அவனியெங்கும் அறிவித்து 43 ஆவது வயதில் மரித்தாள்.

**புனித லூக்காஸ்-அக்டோபர் 18**

நான்கு நற்செய்தியாளர்களில் இவர் ஒருவரே புறவினத்தவர். அந்தியோக்கியாவைப் பிறப்பிடமாகக்கொண்டவர். இவரை "அன்புமிக்க மருத்துவர் லூக்கா" என சின்னப்பர் அழைக்கின்றார். இவர் தனது நற்செய்தியை கி. பி. 70-85 இடையில் எழுதினார். புறவினத்தவர் புரிந்துகொள்ளும் வகையில் இவரது நற்செய்தி அமைந்துள்ளது. இவரது நற்செய்தயை "இரக்கத்தின் நற்செய்தி" என அழைப்பர். சமாரியர், தொழு நோயாளிகள் அயக்காரர், படைவீரர் பெரும்பாவிகள், கல்வியறிவில்லாத ஆட்டிடையர்கள், ஏழைகள் முதலானோர் இவரது நற்செய்தியில் முதலிடம் பெறுகின்றனர்.

**புனித சிலுவைச் சின்னப்பர் அக்டோபர்-19 (கிபி 1694-1775)**

இவரது குடும்பத்தில் 16 பிள்ளைகள். அவர்களில் இவர் மூத்தவர் ஆவார். இவர் திவ்விய நற்கருணை நாதர் மீது அதிக பக்தி கொண்டொழுகினார். இவருக்கு 26 வயது நடக்கையில் ஆண்டவர் இவருக்கு காட்சி கொடுத்து திருப்பாடுகளின் நினைவாக ஒரு துறவற சபையை நிறுவும்படிக் கேட்டார். 7 ஆண்டுகளுக்குப் பின்னர் இவரும், இவரைப் பின்பற்றிய சகாக்களும குருப்பட்டம் பெற்று ஒன்றாக துறவற சீவியம் செய்து வந்தனர். "திருப்பாடுகளின் சபை" என்ற இந்த புதிய சபைக்கு புனித சின்னப்பர் தலைவராக ஏகமனதாகத் தெரியப்பட்டார்.

S. S. கருணைதாஸ்
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.

# யாழ் ஆயரின் சில்லையூர் வருகை

17-9-1989 அன்று காலை 6-30 மணியளவில் யாழ் ஆயர் அதி. வந்தனைக்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுடன் அருள் திரு. செல்வராஜா அடிகளாரும் உறுதிப்பூசுதல் திருச்சடங்கை நிறைவேற்ற சில்லையூருக்கு வருகை தந்திருந்தார்கள். ஆயர் அவர்களை எமது பங்குத்தந்தை பொனிபஸ் அடிகளார், சென் செனீஸ அதிபர் யஸ்ரீன அடிகளார், அருட் சல்வியர், உறுதிப்பூசுதல் பெற்ற பிள்ளைகள், பங்கு மக்கள் அனைவரும் மிகவும் சிறப்பான முறையில் வரவேற்று, மாலை அணிவித்து, பாண்ட வாத்திய இசையுடன் ஆலய வாயிலுக்கு அழைத்துச் சென்றனர்.

ஆலயவாயிலில் தமிழ்ப்பண்பாட்டு முறைப்படி ஆராத்தி எடுத்து, பொட்டுவைத்து, குத்து விளக்கேற்றி, பங்குசபை உறுப்பினர்கள் ஆயரை வரவேற்றனர். ஆயருடன் வருகை தந்திருந்த ஏனைய குருக்களும் ஒன்றிணைந்து கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றினார்கள். ஆயர் தமது மறையுரையில் உறுதிப்பூசுதல் பெற்றவர்களின் அழைப்பு, பணி, கடமை என்பன பற்றியும் 'நீங்கள் இப்பொழுது திருச்சபையில் வளர்ந்த கிறிஸ்தவர்களாக உள்ளீர்கள். ஆனதினால் பரிசுத்த ஆவியை பெற்ற அப்போஸ்தலர்கள் எவ்வாறு உறுதியும், பலமும் அடைந்து கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகர அனுப்பப்படுகிறீர்கள்' என அவர்களின் பொறுப்பை நன்கு உணர்த்தினார். தொடர்ந்து ஆயரினால் சுமார் 188 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருச்சடங்கு மிகவும் பக்தி அருட்சியுடன் நிறைவேற்றப்பட்டது. ஈற்றில் ஆயர் அவர்களின் ஆசீர்வாதத்துடனும், பங்குத்தந்தையின் நன்றி உரையுடனும் திருப்பலி இனிதே முடிவுற்றது. திருப்பலி முடிவடைந்ததும் ஆயர் அவர்களினால் புதிய தருமனைக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தகவல்: –
சில்லையூர் மொறின் எற்வேட்

நீ செய்ய வேண்டிய பணியை நீ செய்யாவிட்டால் உலகிற்கு அந்த நன்மை இல்லாமலே போய்விடும்.

# திருச்சபையில் சகோதரர்கள்

அன்பு சகோதரர்களே!

4-10-89 துறவற சகோதரத்துவ தினத்தைக் கொண்டாடிய உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்.

சகோதரத்துவம் பிறக்கவேண்டும்.
சமத்துவம் வளர வேண்டும்.
முதல் கிறிஸ்தவ வாழ்க்கை தழைக்கவேண்டும்.
இறைவன் தந்தையாகவும்,
கிறிஸ்து நம் அனைவரின் அண்ணனாகவும்

என ஆசித்து அனுபவத்தில் குறைந்த நான் திருச்சபையில் சகோதரர்கள் என்ற தலைப்பில் என்னுடைய கருத்துக்களை உங்கள் முன் இன்று புனித பிரான்சிஸ் அசிசியாரின் சகோதரத்துவ நாளன்று வைப்பது சிறந்தது என எண்ணுகின்றேன்.

வாழ்வில் வளம் களம் காணவேண்டும், களம் காணவளம் செயலிழந்த விசுவாசம், மலரும் மல்லிகை மணம் வீசியே தீர வேண்டும். இது இயற்கையின் நியதி மனிதனாக பிறந்தவனும் முழுமையாக ஏதேனும் ஒன்றிற்காக வாழ்ந்தே தீரவேண்டும்.

வாரி வாரி வழங்குவதன் மூலம்
வள்ளலாகலாம்.
வாழையைப்போலத் தன்னைத் தந்து
தியாகி ஆகலாம்.
உருகி ஓடும் மெழுகைப்போல
ஒளியை வீசலாம்.

அவரின் நிலைத்திறன், மனப்பக்குவம் இவற்றிக்கு ஏற்ப அழைப்பு ஏற்படுவது மறுக்கப்பட முடியாத உண்மை.

"Brothers Gave us as a whole"

துறவற சகோதரர்களாகிய நாங்கள் நம்மையே முழுமையாக தருகின்றோம். என்று எங்கே ??????

கல்விச் சாலையில்
மருத்துவமனையில்
தங்கும் விடுதியில்
மறைபரப்புப் பணியில்
சாட்சியம் அளிக்கும் வகையில்
கலை வழியில், அன்றாட சமூக
மேடையில் நிச்சயமாக ..............

சகோதரத்துவத்திற்குப (அப்பணி 2: 42) சான்று பகர்ந்து நமது எடுத்துக்காட்டான வாழ்வால் இயேசுவின் மதிப்பீடுகளை உலகிற்குக் காட்டுபவர்களாக வேண்டும். அறியாமை, புரியாமை, தெளிவின்மை, இவர்களுக்கு கல்விக்கண் திறக்கவேண்டும். உடல் நோயும், மனநோயும் புரிந்து விடுவிக்கும் பணியில் ஈடுபட வேண்டும். வழக்கு மன்றம் எதிர்க்குரல் கொடுக்க வேண்டும்.

கிறிஸ்து கூறினார் "உங்கள் போதகரும், உங்கள் ஆண்டவருமான நான் இப்படி பாதங்களைக் கழுவினேன் என்றால் நீங்களும் மற்றவர்களின் பாதங்களைக் கழுவவேண்டும். அரு. (13: 14–15) உங்கள் தலைவனாக இருக்க விரும்புகிறவன் உங்கள் பணியாளனாகட்டும். (லூக் 22: 25–26) மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும் பலருடைய மீட்புக்கு விலையாக தம்முயிரையும அளிக்க வந்தார். (மாற் 10–45) கிறிஸ்து கூறும் இவற்றை நிலைநிறுத்துவதில் தான் நம் வாழ்வு மையம் பெற வேண்டும். தங்களை முற்றிலும், முழுமையாக அர்ப்பணித்தால் வாழ்வின் எல்லா நிறைகளுடனும், குறைகளுடனும் நம்மையே நாம் அளிப்பதால் அன்பு என்னும் நற்செய்தியில் வாழ்ந்து காட்டுவதால் நம் துறவற சகோதரத்துவம் உயர்வை எய்துகிறது.

இலங்கையில கிறிஸ்து நிறுவிய திருச்சபை உண்மையில் கட்டி எழுப்பப்பட வேண்டுமானால் எளிய ஏழை மக்களின் வாழ்விலும தான் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். துறவற சகோதரர்கள் எளிய மக்களிடையே பணிபுரிந்தால் தான் பாறையின் மேல் கட்டிய ஆலயமாக திருச்சபை இலங்கையில் தொடங்க முடியும்.

அன்பு துறவற சகோதரர்களே! திருச்சபையில் அங்கம் வகிக்கும் எல்லா துறவற சபையின் சகோதரர்களுக்கும் இவை உதவியளிப்பனவாக இருப்பதோடு, கிறிஸ்துவின் பாதையில் சென்றுகொண்டே அனைவரையும கிறிஸ்துவுக்குள் அன்புச்சகோதரர்களாக இணைக்கும ஒப்பற்ற பணியை ஆற்றுவதில் நாம் அனைவரும் நாளும் வளர்வோம என்று வாழ்த்த இவ்வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த சகோதரர் புனித பிரான்சிஸ் அசீசி அண்ணலின் ஆசீர் எல்லா அருட் சகோதரர்களுக்கும் கிடைக்க இந்நாள் நாம் அனைவரும இறைவனை வேண்டி நிற்போம்!

சகோ. ம. கிறேஷன் C. M. S. F. மாத்தளை

## பிழை திருத்தம்

6-10-89 பாதுகாவலனில் 8-ம் பக்கத்தில் 'புதியதோர் யுகத்தின் பேறுகாலவேதனை' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் 5வது பந்தியில் வரும் "சொந்த ஆன்மீக வாழ்வை அமெரிக்கவாதம்" என்ற வரிக்குப் பதிலாக.

"சொந்த ஆன்மீக வாழ்வைக் கவனியாது சமய-சமூக பணியில் ஈடுபடும் வாழ்வை அமெரிக்க வாதம்" ...... எனத் திருத்தி வாசிக்குக.

தவறுக்காக வருந்துகிறோம். ஆ—ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதிச் செபியுங்கள் போட்டி - 28

**"பாரெங்கும் நற்செய்தி பரவ"**

ஒரு செபம் எழுதி 27-10-89 றக்கு முன் "பாதுகாவலன்" த. பெ. இல. 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த செபம் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டு பரிசு ரூபா 25/-ம் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பரிசு பெறுபவர் பெயரும், பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

பரிசு பெறும் செபம்

**"தாய்க்குலத்தின் பணி சிறக்க"**

கருணைக்கடலாகிய இயேசுவே! பாவங்களால் மாண்ட எம்மை மீட்க வந்த பரம்பொருளே! மாசணுகா மாமரியின் உதரத்திலே உதித்து அவளையே மனுக்குலத்திற்கு அன்புத் தாயாக அர்ப்பணித்த மாபெரும் கருணை பொருந்திய யேசுவே! நீர் எமக்கு செய்த, செய்து வருகின்ற சகல நன்மைகளுக்கும் நன்றி கூறுகின்றோம்.

அன்புத் தந்தையே! எம்மண்ணில் உள்ள ஒவ்வொரு தாய்மாரையும் நிறைவாக ஆசீர்வதியும் இவர்கள். தம் கடமைகளில் பொறுப்புடன் நடந்து குடும்பங்களில் அமைந்த மனவியராகவும், அன்பு அன்னையாகவும் அயலவரை மதித்து அவர்களுடன் பகிர்ந்து வாழ்வதில் நிறைவு காணவும், எதிர்காலத்தின் தலைவர்களாகிய தங்கள் பிள்ளைச்செல்வங்களை நற்பண்பிலும், அன்பிலும் வளர்த்தெடுக்கவும் அருள்புரியும்.

இன்று எம்மண்ணில் நிகழும் அனர்த்தங்களால் பெற்றோரை இழந்து அனுதைகளாய் அலைந்து திரியும் குழந்தைகளுக்கும், வன்செயலால் பாதிக்கப்பட்டு எவரும் அற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அல்லலுறும் எம் சகோதரங்களுக்கும் எம் தாய்மார்கள் ஒவ்வொருவரும் தேற்றராய் இருக்கவும் தம்மால் இயன்ற உடல் உதவிகளை செய்யவும் தாய் உள்ளத்தோடு இவர்கள் நல்ல முறையில் செயற்பட்டு அவர்களை ஆதரிக்கவும் எம் தாய்மாருக்கு நல்ல உள்ளதைக் கொடுத்தருளும்

அன்பு இயேசுவே! நீர் மனுக்குலத்திற்கு அர்ப்பணித்த அன்னை மரியாள் தூய ஆவியின் வருகைக்காக அப்போஸ்தலருடன் சேர்ந்து எவ்வாறு இடைவிடாது விசுவாசத்துடனும், திடத்துடனும் செபித்தாளோ, அதே போன்று எம் தாய்மார்கள் ஒவ்வொருவரும் தம் அயல் குடும்பங்களுடன் சேர்ந்து உலகின் நிலையான சமாதானத்திற்காகவும், உமது இரண்டாம் வருகைக்காகவும் செபிக்கவும், அவர்கள் தமக்கு வரும் கடினமான கசப்பான அனுபவங்களிலும் மனம் தளர்ந்து விடாது தமது பணிசிறக்க அயராது உழைத்து, திடத்துடனும் மன உறுதியுடனும் செயற்பட அருள் புரிந்தருளும். எம் மீட்பரும் இரட்சகருமான உம்மை இரந்து கேட்கின்றோம். ஆமென்.

A. மெலியா

கரம்பொன் தெற்கு, வெலிஞசிமூலை, ஊர்காவற்றுறை.

---

## விண்ணக வாழ்வின் 10-ம் ஆண்டு நினைவு



திரு. அல்பிரட் அன்ரனி யோசவ்

(இளைப்பாறிய முன்னைநாள் யாழ் அரசாங்க அதிபர்)

தாயின் மடியில்: 04-05-1918

இறைவனடியில்: 18 10 1979

"வேதத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை நாம் தினமும் வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்மாசாந்திக்காக 18.10 89 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு பற்றி அவரின் ஆன்மா சாந்திக்காக செபிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி,

மக்கள், மருமக்கள்.

106, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

A/229

---

## விண்ணகப் பிறப்பில் 3-ஆம் ஆண்டு நினைவு



திரு. எலியாஸ் மரியான் ஜேம்ஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

(14-10-1989)

(கத்தோலிக்க ஆசிரியர் சங்க இளை 4ன் செயலர்)

இறப்பென்பது முடிவல்ல அது நிறைவாழ்வின் ஆரம்ப நாள் நற்பண்பின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் சமூகத்தின் புனிதக்காரமாய் பாடசாலைப் பணியில் உத்தமராய் மாணவர் மனதில் நல்வழி காட்டியாய் குருக்கள் தனிலே நல்லாசிரியனும் அவனியில் புரிந்த பல கனை நினைக்கின்றோம்

நித்திய வாழ்வில் நிலைத்திருக்க நிர்மலனை இறைஞ்சுகின்றோம்.


இவரது ஆன்ம சாந்திக்காக 14-10-1989 சனி மாலை 5-00 மணிக்கு சுண்ணாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் வருந்தும் குடும்பத்தினர்.

புனித அந்தோனியார் ஒழுங்கை, சுன்னாகம். A/223

---

## முதலாம் வருட நினைவு அஞ்சலி



தருமதி ஆரோக்கியம் அந்தோனிக்கம்

மண்ணில் மலர்ந்தது

3-7-1914

விண்ணிற்கு விரைந்தது

15-10-1988

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். நகரில் உள்ள அடைக்கலநாயகி (O. L. R.) ஆலயத்தில் 15-10-89 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கும் 16-10-89 திங்கட்கிழமை காலை 5-30 மணிக்கும் புனித யாகப்பர் ஆலயத்திலும் 17-10-89 வதா புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை 4-30 மணிக்கும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இவளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றுடுமபடி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிரிவால் துயருறும்

மக்கள், மருமக்கள்,

சகோதரர், பேரப்பிள்ளைகள்,

உற்றார், உறவினர்.

120, பிரதான வீதி யாழ். நகர் A/219

---

## முதல் மாத நினைவு



த. க. அமிர்தநாதர்

தோற்றம்: 25-4-1902

அழைப்பு: 18-9-1989

மக்கள் அனைவரின் துயர் துடைப்பவனுகவும் நல்லாசிரியனுகவும் வாழ்ந்தாய் மனைவிபிள்ளைகளை நன்கு வாழவைத்த ஒரு உத்தமனுகத் திகழ்ந்தாய்! இறைவன் பணியில் இறுதிவரை அயராது விசுவாசத்துடன் பிரமாணிக்கமாய் நடந்தாய்! கிறிஸ்துவில் வாழ்ந்தவன் என்றும் இறப்பதில்லை!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 18-10-89 காலை 6-30 மணிக்கு மன்னர் புனித மரியாள் ஆலயத்திலும், மாலை 5-00 மணிக்கு நெடுந்தீவு புனித சவேரியார் ஆலயத்திலும் 21-10-89 காலை 10-30 மணிக்கு யாழ். சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை அன்புடன் அறியத்தருகிறோம். அன்னாரின் மரணச் சடங்குகளில் பங்கு கொண்ட குருக்கள், கன்னியர்கள் அன்பர்கள் அனைவர்க்கும் அன்பார்ந்த நன்றிகள்.

மனைவி,

அருட் தந்தை ஜெயசேகரம்,

மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள்.

A/227

---

## திருச்செபமாலை

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரியாளைச் சுற்றி அணைக்கும் வலுவான பிணைப்பாக அமைவதே திருச் செபமாலை ஆகும். (12 ஆம் பத்திநாதர்)

9. கிறிஸ்துவின் மீட்பு வரலாற்றின் பேருண்மைகள் அத்தனையும் திருச்செபமாலையின் 15 காரணிக்கங்களிலும் அடங்கியுள்ளன. எனது இறைபணி வாழ்வின் ஒவ்வொரு நாளும் காலை, மதியம் மாலை ஒவ்வொரு செபமாலை செபிப்பதன் வழியாக கிறிஸ்துவின் மீட்பில் நாளாந்தம் பங்கு கொள்கிறேன்.

10. ஆன்மாக்களில் ஐயம் நீக்கி அருள்வாழ்வில்வளர்ச்சி கொடுத்துவரும் ஒரு பக்தி முயற்சியானது அநேக நூற்றுண்டுகளாக பரிசுத்த திருச்சபையின் அங்கீகாரம் பெற்ற திருச் செபமாலையே.

(6 ஆம் சின்னப்பர்)

அருட்திரு. A.M. சரிபன், C.R.

---

## விண்ணுலக வாழ்வில் 50 ம் நாள் நினைவு அஞ்சலி



திருமதி ரோசா சவிரிமுத்து

மலர்வு 16-02-1918

உதிர்வு 22-08-1989

இவளின் ஆன்மா இளைப்பாறி விண்ணகத்தில் மாட்சிபெற்று வீற்றிருக்க இறைவனை வேண்டுகிறோம்

மகன், மகள், மருமக்கள்.

நானுட்டான். A/224

---

## 2-ம் வருட நினைவஞ்சலி



G. W. அலெக்சாந்தர்

தோற்றம்: 25-4-1915

மறைவு: 19-10-87

அன்பறிவு அருள் சாந்தம் அமைதிபொங்க அடக்கத்தின் நிறைகுடமாய் அவனியில் வாழ்ந்து பொன்பூத்த வானகத்தின் மகுடம் சூடப் போய்விட்டாய் புண்ணியனே மறப்போமோ நாம்

இவரின் ஆன்மவாழ்விற்கு 19-10-89 காலை 6 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் கலந்து வேண்டுதல் செய்யும் வண்ணம் அழைக்கும்,

மனைவி, மக்கள்,

மருமக்கள், பேரர்.

118, 4ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்,

A/231

---

## நினைவில் மறவோம்.

**50ம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி. அந்தோனிப்பிள்ளை லூசிஸ்மேரி

**15ம் ஆண்டு நினைவஞ்சலி**

திரு. சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

ஆண்டவரின் அரவணைப்பு:-

15-10-1939 31-12 1974

"எங்களுடன் நீங்கள் வாழ்ந்த இனிய நாளை நினைக்கின்றோம் தங்கி நீங்கள் எங்களோடு தப்பாமல் வழிநடத்தி பொங்கு மகிழ் தந்து நின்றீர் போற்றி நிற்போம் வாழ்வெல்லாம்"

இவர்கள் ஆண்டவரின் அரவணைப்பில் ஆறுதல் அடைய 16-10-1989 அன்று சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்களை நினைவுறும்

அன்பு மகள், பேரர்

சில்லாலை. A/222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## கத்தோலிக்க மேயரின் வேண்டுகோள்

அண்மைக் காலத்தில் படகுகளில் ஜப்பானுக்கு வந்து குடியேற முயலும் வியட்நாம், சீன அகதிகளை வெளியேற்ற வேண்டுமென்ற அரசின் கொள்கையை நாகசாக்கி நகரின் கத்தோலிக்க மேயரான ஹிற்றோஷி மோட்டோஷிமா வன்மையாகக் கண்டித்துள்ளார்.

1975ஆம் ஆண்டு முதல் வியட்நாம் அகதிகள் ஜப்பானுக்கு வந்த வண்ணம் இருக்கின்றனர். வரும் வழியில் அவர்கள் சீனாவின் கரையோரங்களில் தங்கிவருவதால் அவர்களுடன் பல சீன அகதிகளும் சேர்ந்து கொள்ளுகின்றனர். இவர்கள் ஜப்பானின் தெற்குப் பகுதியில் பெரும்பாலும் நாகசாக்கிக்கு அண்மையில் கரையேறுகின்றனர். இவர்களுள் பலர் வறுமை காரணமாகவும், வேறு பலர் அரசியல் காரணங்களுக்காகவும் சொந்த நாட்டிலிருந்து வெளியேறியவர்கள்.

ஜப்பானிய அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இவர்களை ஜப்பான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென மேயர் மோட்டோஷிமா வற்புறுத்தி வருகிறார். சிலர் அவருக்கு ஆதரவு அளித்தாலும் அவருக்குக் கடுமையான எதிர்ப்பு இருந்து வருகிறது.

## குருத்துவ உருவாக்கத்திற்கு உள்நாட்டில் நிதி சேகரிப்பு

இலங்கையில் புனித இராயப்பர் சபையின் நூற்றாண்டு நிறைவையொட்டி சுதேசக் குருக்களை உருவாக்குவது பற்றியும் தாம் அதற்கு நிதியுதவி அளிக்க வேண்டிய அவசியம் பற்றியும் மக்களுக்கு உணர்த்துவதற்கான செயற்பாடொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்றும் மண்டல நாடுகளில் தேவ அழைத்தல்கள் அதிகரித்துள்ளமையால் அவர்களின் பயிற்சிக்கு அதிகநிதி தேவைப்படுகிறது. இதனை உள் நாட்டிலேயே திரட்டவும் வேண்டியிருக்கின்றது. சுதேசக் குருக்களை நியமிப்பது மட்டுமல்ல மனப்பான்மையில் மாற்றம் ஏற்படவேண்டும்.

மக்கள் தம் ஆதரவால் குருக்களை உருவாக்கும்போது தம்மைக் கரிசனையுடன் உருவாக்கிய மக்களுக்காக குருவும் தன்னை அர்ப்பணிக்க ஏதுவாகின்றது என இச்சபையின் தேசிய இயக்குனரான பிதா மல்கம் ரஞ்சித் கூறியுள்ளார்.

ஜின்பிகாட் என்னும் பெண்ணால் நிறுவப்பட்ட புனித இராயப்பர் சபை சுதேசக் குருக்களை உருவாக்குவதற்குத் துணைபுரிந்து வருகின்றது.

## பஞ்ச நிவாரணத்துக்கு 3000 கிறிஸ்தவர் ஆதரவு

ஏனைய மக்கள் உண்டாட்டுக் களியாட்டுகளில் மூழ்கியிருந்த வேளையில் சிங்கப்பூரையும் மலேசியாவையும் சேர்ந்த 3000 கிறிஸ்தவ மக்கள் ''வோல்ட் விஷன்'' மேற்கொண்ட 30 மணித்தியால பஞ்ச நிவாரண திட்டத்தின்படி உண்ணாவிரதம் இருந்தனர்.

வழக்கமாக உணவிற்காகச் செலவிடப்படும் பணம் தெற்கு சூடான், மொசாம்பிக், எத்தியோப்பியா போன்ற நாடுகளில் பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவளிக்கப் பயன்படுத்தப்படும்.

''இவர்களது அனுதாபமும், பங்களிப்பும் உண்ண உணவும், இல்லிடமும், வைத்திய வசதியுமின்றிக் கஷ்டப்படும் ஆயிரக்கணக்கான ஆபிரிக்கருக்கு நம்பிக்கையளிக்கின்றது! துன்புறும் ஆபிரிக்க மக்களுக்கு உலகில் ஏனைய மக்களிடமிருந்தே நம்பிக்கை கிடைக்கிறது'' என சிங்கப்பூரிலுள்ள ''வேர்ல்ட் விஷன்'' இயக்குநர் கோ எங் கீ கூறியுள்ளார்.

சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் 59 மதஸ்தாபனங்களும் 23 தனிநபர்களும் உயிர்காக்கும் இத்திட்டத்தில் செயற்பட்டு வருகின்றன. இதன் மூலம் 150,000 அமெரிக்க டாலர்கள் திரட்டமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் சிறப்பு நிகழ்ச்சியாக ஆபிரிக்க கிராம வாழ்க்கை மேடையில் தத்ரூபமாக நடித்துக் காட்டப்பட்டது.

## கர்நாடக மொழிப்பிரச்சினை தீர்ந்தபாடில்லை

பெங்களூர் மறைமாவட்டத்தில் மொழிப்பிரச்சினை மீண்டும் தலைதூக்கியுள்ளது. பேராயர் 1988 பெப்ரவரி 29இல் விடுத்த சுற்றறிக்கையை கத்தோலிக்க கன்னட சங்கம் ஏற்க மறுத்துள்ளது. சங்கத்தின் தலைவரான திரு. ஜேக்கப் பிரான்ஸிஸ் பேராயர் கன்னடக் கத்தோலிக்கருக்கு எதிராகச் செயற்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆலயங்களில் போதிய அளவில் கன்னட திருப்பலிகள் நடத்தப்படுவதில்லையென்றும் சில ஆலயங்களில் மாதத்துக்கொரு கன்னடப் பூசைப் பலியே ஒப்புக் கொடுக்கப்படுவதாகவும் இவர் கூறுகின்றார்.

மறைமாவட்டத்துக்கு வெளியே எத்தனையோ கன்னடக் குருக்கள் இருந்த போதிலும் பேராயர் மங்களூரிலும், தமிழ் நாட்டிலுமிருந்து குருக்களை அழைத்துள்ளதாகவும், சங்கத்தின் பிரதிநிதிகள் புது டெல்லியில் பாப்பரசரின் தூதுவரைச் சந்தித்து தமது குறைபாடுகளைப்பற்றி தெரிவிக்கப் போவதாகவும், அமைதியான முறையில் போராட்டம் நடத்தப் போவதாகவும் கூறினார்.

## ஆசியர்கள் திருச்சபைக்குத் தியானத்தைக் கொண்டுவரவேண்டும்

பெங்களூர் பேராயர் அல்பொன்ஸஸ் மத்தியாஸ் அண்மையில் தமது ஆயர் அபிஷேகத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாடினார். அத்தருணத்தில் ''ஆசிய போக்கஸ்'' நிருபர் அவரைப் பேட்டி கண்டபோது பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஆசிய நாடுகளில் தியான வாழ்வுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமெனக் கருதுகிறேன். இது சில குழுக்களுக்கு மட்டுமல்ல, முழுத்திருச்சபைக்கும் பொருந்துவதாகும். இதுவரை மேற்கு நாடுகளைப் பின்பற்றி வினைத்திட்பத்துக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். எம்மிலும், எமது பணம், கல்வி ஆகியவற்றிலும் அதிக நம்பிக்கை வைத்திருந்தோம், இறைவனிலும் அவரது மீட்பும் அருளிலும் தங்கியுள்ள மக்கள் நாம் என்பதை எடுத்துக் காட்டவேண்டும்.

தியானமே நாம் இறைவனில் எவ்வளவு தங்கியுள்ளோம் என்பதை எமக்கு உணர்த்துகிறது.''

பண்பாட்டு மயமாக்கல் பற்றிக் குறிப்பிடும்போது இன்றைய மக்களுடைய வாழ்வு எவ்வாறிருக்கின்றதோ அதை ஒட்டியே திருச்சபை செல்ல வேண்டுமென்றும், நிலத்தில் அமர்தல், ஒரு குறிப்பிட்ட உடை அணிதல் போன்ற வெளிச் செயல்களில் மட்டுமன்றி சிந்தனையிலும், ஆன்மீகத்திலும் அது இடம் பெற வேண்டுமென்றும் கூறினார்.

## இந்தியக் கத்தோலிக்கர் சாதிவேற்றுமையை ஒழிக்கவேண்டும்

இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை நவம்பரில் தனது ஈராண்டுக் கூட்டத்தை நடத்தும்போது ஹரிஜனக் கிறிஸ்தவர் நிலையும் அவர்களது ஆய்வுக்கு எடுக்கப்படும் ஒரு முக்கிய விடயமாகும், இந்தியக் கிறிஸ்தவர்களில் அரைவாசிக்கு மேற்பட்ட இந்த ஹரிஜனங்கள் அரசினாலும் திருச்சபையினாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தம்மை அடக்கியொடுக்கி வந்த இந்து சமூகத்தின் சாதிக்கொடுமையிலிருந்து விடுபடுவதற்காக கிறிஸ்தவ மறையை தழுவியவர்கள் ஆனால் இப்போது அவர்களுக்குக் கிடைப்பது இருமடங்கான புறக்கணிப்பாகும். அவர்கள் தழுவிய புதிய சமயம் அவர்களுக்கு சமத்துவத்தை கொடுக்கவில்லை. அத்துடன் அரசினால் ஏனைய ஹரிஜன மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கிறிஸ்தவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. இந்த சட்டத்தைத் திருத்தியமைப்பதற்கு திருச்சபை பன்முறை முயற்சியெடுத்த போதிலும், கிறிஸ்தவ மறையில் சாதிக்கு இடமில்லாதபடியால் அவர்களை ஹரிஜனங்கள் என அங்கீகரிக்க அரசு மறுக்கிறது.

ஆனால் சென்ற ஜூன்மாதம் பம்பாயில் நடைபெற்ற தேசிய கத்தோலிக்க மகாநாட்டில் நாடளாவிய ரீதியில் இது பற்றி நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் அசட்டையான நிலைபற்றி ''தீ இலஸ்ட்றேற்றட் வீக்லி ஒவ் இந்தியா'' என்னும் வெளியீடு கடுமையாக விமர்சனம் செய்துள்ளது. அரசாங்க அதிகாரிகளும் திருச்சபை அதிகாரிகளும் உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்களாதலால் அவர்களைத் தொடர்ந்து அடக்கி வைக்க முயல்கின்றனர் என அது குற்றம் சாட்டியுள்ளது.

இந்நிலை தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் மோசமாக இருப்பதாக இதனை ஆராய்ந்த இயேசுசபைக் குரவராக பிதா ஜோசே கண்ணநாய்க்கில் கூறியுள்ளார்.


### திருவழிபாட்டு நாட்காட்டி — 1990

1990ஆம் ஆண்டுக்கான திருவழிபாட்டு நாட்காட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

**பிரதி ஒன்றின் விலை ரூபா 15/=**

- கோவில்கள், தாபனங்கள் தொடர்பான விபரங்கள் வெளியிட விரும்புவோர் 11-11-89-ற்கு முன் விளம்பரம் ஒன்றுக்கு ரூபா 10/— வீதம் செலுத்தியனுப்புக.
- நாட்காட்டி தேவைப்படுவோர் தொகையைக் குறிப்பிட்டு 18-11-89-ற்கு முன் அறியத்தரவும்.


## வருடாந்த உள்தியானம்

மன்னார் மறை மாவட்ட புனித வின்சன்டிபோல்சபையினருக்கான உள்தியானம புரட்டாதி மாதம் 14ம், 15ம், 16ம், திகதிகளில் மடுத்திருப்பதியில் நடைபெற்றது. தலைமன்னார், பேசாலை, மன்னார், தாழ்வுபாடு, பள்ளிமனை. வங்காலை, நானாட்டான், உயிலங்குளம், அடம்பன், பண்டிவிரிச்சான், சிலாவத்துறை, வவுனியா. ஓமந்தை ஆகிய பங்குகளில் இருந்து 22 பந்திகளைச் சேர்ந்த 169 உறுப்பினர்களும், அருட்சகோதரிகள் மூவரும், ஆன்மீக இயக்குனர் அருட்திரு சேவியர் குரூஸ் அடிகளும் இதில் கலந்து கொண்டனர்.

உள்தியானத்தில் மறைபோதகராக இருந்தவர் வங்காலைப் பங்குத்தந்தை அருட்திரு. அருள்நாதன் அ. ம. தி. அடிகளாவர் 14ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணியளவில் நற்கருணை ஆசீர்வாதத்துடன் தியானம் ஆரம்பமானது. ஜெத்சமனி அனுபவங்களுடன் மறை உரையை ஆரம்பித்த அடிகளார் தொடர்ந்து இரு தினங்களும் புனித அருளப்பர் நற்செய்தியிலிருந்து 'நல்ல ஆயன்', புனித லூக்காஸ் நற்செய்தியிலிருந்து பொற்காசுகளின் உவமை, 'ஊதாரியின் உவமை' போன்றவற்றை வாசித்து விளக்கம் அளித்தார். யேசுக்கிறிஸ்து வாழ்ந்த அன்றைய கால அரசியல் சூழ்நிலைகளுக்கமைய பல சரித்திர ஆதாரங்களை எடுத்துக்காட்டி அனைவருக்கும் எளிதில் புரியக்கூடிய பாணியில் அவர் ஆற்றிய உரை சபையினர் உள்ளத்தில் பலஉண்மைகளைத் தெளிவுபடுத்தியது அத்துடன் ஏழைகள் மட்டில் கரிசனை கொள்ளும் புனித வின்சன்டிபோல் சபையினரின் பணிகளையும் பாராட்டிப் பேசினார்.

மறை உரையை அடுத்து குழுநிலையில் கலந்துரையாடலும் இடம் பெற்றது. 16ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பொதுக்கூட்டமும் 6 மணியளவில் திருமணித்தியாலமும் இடம் பெற்றது. சகல உறுப்பினர்களும் வழிபாடுகளில் உற்சாகமுடன் கலந்துகொண்டனர். 17-ம் திகதி ஞாயிறு காலைத்திருப்பலியுடன் உள்தியானம் முடிவுற்றது.

அமலா ஏபிரகாம் சொய்சா,

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல: QB/ 1001/ 58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்